திருக்கோயில்

ஜனவரி 1992 விலை ரூ. 3



இராமலிங்கர் பணி மன்றமும், சங்கீத வித்வத் சபையும் இணைந்து நடத்திய தேவார மூவர் இசைக் கலைவிழாவின் தொடக்க விழா மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் நடைபெற்றது. அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு **சுகவனேஸ்வர்** அவர்கள் இவ்விழாவைத் தொடங்கி வைத்து, இசை, ஆகமம் பற்றிய அரிய கருத்துக்களை விளக்கினார்கள். தேவார இசையை ஆலயங்களில் வளர்ப்பதற்கான வழிமுறைகளையும் விளக்கினார்கள். விழாவில் மாண்பமை நீதிபதி **சிங்கார வடிவேலு** அவர்களும், இராமலிங்கர் பணிமன்றத் தலைவர் திருமிகு டாக்டர் **நா. மகாலிங்கம்,** திருமிகு **கு. ஆளுடைய பிள்ளை,** ஐ.ஏ.எஸ்., கௌமார மடம் தவத்திரு **சுந்தர சுவாமிகள், ஊரன் அடிகள்** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு **கு. சிதம்பரம்,** பி.ஏ. அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

முகப்பு:
அருள்மிகு
ஐயப்பன் அருட்கோலம்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை	திருவள்ளுவர் ஆண்டு 2023 பிரஜோற்பத்தி ஆண்டு தை	மணி :
34	ஜனவரி 1992 விலை ரூ. 3-00	1

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ.	18-00
ஓர் ஆண்டு	—	ரூ.	36-00
ஆயுள்	—	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

பொருளடக்கம்

அருளாளர்கள் அருள் உள்ளம்
— திருமந்திரச்செம்மல்,
டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். அவர்கள்

மகாமக பகத்துவம்
— தவத்திரு டாக்டர் சாயிமாதா
சிவபிருந்தாதேவி

சந்தனாசிரியர்கள் அருள்வரலாறு
— அன்பு அருணாசல அடிமை.

சுற்றாலயம்
— ஞானச்சேரி ஞானிகள்

சித்திர பாரதம்
— செவ்வேள்

மாயைமறைந்தது
— டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம்

திருக்கோவில நிர்வாக வாரியம்

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

கீதைக்குறள்கள்
— அறநெறியண்ணல்
கி. பழநியப்பனார்

ஸ்ரீ ஐயப்பன்
— தவத்திரு சந்திரசேகரேந்திரசரஸ்வதி
சுவாமிகள்.

"திருக்கோயில்" வாசகர்களுக்கு
எங்கள் மனம் நிறைந்த
'1992 புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்து'
தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

அருளாளர்களின் அருள் அனுபவம்

திருமந்திரச் செம்மல்
டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009

(8)

'திருமந்திரச் செம்மல்'

திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.

அடியார்கள் உள்ளங்களல் அடைக்கல உணர்வு என்றுபே நிரம்பி வழியும். அந்த அடைக்கல உணர்வு ஓர் வற்றாத ஊற்றினைப் போல் அவர்களுடைய நெஞ்சங்களிலிருந்து வெளிப்பட்டு, ஆறுபோல் பாய்ந்து அவர்களுடைய திருவாக்குகளையெல்லாம் நிரப்பி, பிறருடைய உள்ளங்களிலும் இறை உணர்வு எனும் வித்தினை போட தேவையான ஆன்மீக நிலத்தை செழுமைப்படுத்தும். அவர்களுடைய உள்ளங்களிலே தோன்றும் அடைக்கல உணர்வு இறைவனை உணர்ந்த பிறகு எழும்பும் ஓர் சக்தியாகும். அந்த அடைக்கல உணர்வே அவர்களுக்கு தங்களைத் தாங்கிக் கொள்ளும் திறனைக் கொடுக்கின்றது. உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அடியார்கள் உள்ளங்கள் காணும்பொழுது, அடைக்கல உணர்வே அவர்கள் காணும் காட்சிகளுக்குப்பொருளைக் கொடுக்கும். அடியார்கள் அடைக்கல இன்ப வெள்ளத்தில் திளைக்கின்றார்கள்.

நமக்குத் துன்பம் நேரிடும்பொழுது இறைவனைத் தஞ்சம் புகுகின்றோம். ''இறைவா என்னைக் காப்பாற்று, எனது துன்பத்தை அகற்றிவிடு'' என்றெல்லாம வேண்டிக்கொள்வோம். இறைவனுடைய கருணையால் நமது துன்பம் நீங்கிய மறுவிநாடியே இறைவனை மறந்து விடுவோம். துன்பம் நீங்கியதற்கு நாமே காரணம் என்று நினைத்துக் கொள்வோம். எல்லாம் நமது சாதனை என்று இறுமாப்பு அடைவோம். நான் எ.கிற ஒரு மாயை இருள், ஓர் அறியாமை, நமது உள்ளத்திலே புகுந்து நிற்பதால், நாம்என்றுமே அடைக்கலம் புகுந்து ஒன்றி நிற்க வேண்டிய ஒரு பரம் பொருளின் அருளால்தான் நான் என்கிற நினைப்பே நமது உள்ளத்தில் தோன்றுகிறது, அதுவே ஒரு மாயையைத் தோற்றுவிக்கிறது, அதுவே அந்த மாய இருளை அகற்றும் சக்தியையும் உடையது என்பதையெல்லாம் உணர்ந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றோம்.

இறை உணர்வாளர்கள் இறைவனிடம் அடைக்கலம் புகுதல் ஓர் ஞான அனுபவத்தின் அடிப்படையில்நிகழ்கின்றது. அது அவர்களைப் பற்றிக் கொண்டு என்றுமே நிலைத்து நிற்கக் கூடிய ஒரு அனுபவமாகும். அந்த அனுபவத்தை அவர்கள் பெற்றவுடன் நான் என்கிற நினைப்பை அவர்கள்விட்டொழிகின்றனர். அவர்களுடைய மனம் சுதந்திரமாகச்சுற்றித் திரிவதில்லை. உண்மையில் அவர்களுக்கு மனம் மற்றைய உட்கருவிகள் சுயேச்சையாகச்செயல்படுவதில்லை. அந்த நிலையில் அவர்களுக்கு நான் என்கிற நினைப்பு கிடையாது. பரம்பொருளைத் தவிர வேறொன்றில்லை என்கிற அனுபவத்தில், பரம்பொருள் இன்பத்தில் ஈடுபட்டு, தனது புலன்களையும், கருவிகளையும் மறந்து நிற்பவர்கள் அருளாளர்கள். **''ஒன்று நீ அல்லை; அன்று ஒன்றி இல்லை''** என்பார் மாணிக்கவாசகப் பெருமான்.

அருளாளர்கள் கொள்ளும் அடைக்கல உணர்வில் அகங்காரம் சிறிதும் இல்லாத காரணத்தினால், அவர்கள் தமக்கென்று உடலோ உயிரோ, உடைமையோ தனியாக இருப்பதாக

கருதுவதில்லை. அவ்வாறு தனியாக இவைகள் இருக்கின்றன என்று தோன்றும் எண்ணமே ஓர் மாயை என்று கருதுகிறார்கள். அப்படி அவர்கள் எண்ணுவதால், அவையெல்லாம் உண்மைக்கு மாறுபட்டவைகளாக அவர்களுக்குத் தோன்றுகின்றன. ''**யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்;** என்றார் மாணிக்கவாசகப் பெருமான். தான் என்கிற உணர்வும், அதை வளர்த்தலும், அதற்கு அடிமைப்பட்டு பிறரிடமிருந்து தன்னை வேறுபடுத்தி, செய்கைகளைப் புரிந்து, வினைகளை ஈட்டுதலும் அறியாமையின விளைவு என்பது அருளாளர்களின் அனுபவ ரீதியான உண்மையாகும். தங்கள் வசம்ஒன்றுமில்லை. தாங்களே இறைவனுடைய உடைமை என்பதும் அவர்களுடைய திருவாக்காகும். ''புகல் இடம் பிறிது ஒன்று இல்லை'' என்றார் மாணிக்கவாசகர்.

அருளாளர்கள் இறைவனிடம் அடைக்கலம் புகுவதும், தங்களை அவனுடைய உடைமை என்று கூறிக்கொள்வதும், இறைவன தங்களை ஆட்கொள்கின்றான் எனபதும், இறைவனுடைய அருளின் பல்வகைப் பிரதிபலிப்பே என்று உணர்ந்து அவர்கள் அருளை நினைந்து நினைந்து வியப்படைகின்றார்கள். வன்தொண்டரை இறைவனார் ஆட்கொண்டதும் அருட்செய்கையே ஆகும். வன்தொண்டர் ஊழிதோர் ஊழி இறைவனிடம அடைக்கலம் புகுந்திருந்த காரணத்தினால், இறைவனால் அவர் ஆட்கொள்ளப்பட்டமையால், இறைவன் இந்தப் பூவுலகிலும் அவரைத் தொடர்ந்து வந்து, மறையோர் முன்னிலையில் தடுத்தாட்கொள்கின்றான். இதை உணர்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் **''மன்றுளீர் செயலோ வந்து வலிய ஆட்கொண்டது''** என்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனுக்கு ஓர் அடிமை. எப்பொழுது முதல்? ''அக்காலம்' என்றார் பித்தனாகிய சிவபெருமான். அக்காலம் என்றால், இன்னது என்று அறியப்படாத அநாதி காலம் என்பது பொருளாகும். சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவனுக்கு யார் அடிமையாக்கினார்கள்? ''தந்தை தன் தந்தை' என்கிறார் தடுத்தாட்கொண்ட வள்ளல். இதற்கு அங்கு முன்னோர் என்று பொருள். அதுவே முன்னோர்க் கூட்டமாகும். கூட்டத்தின் பழமையை ஆராய்ந்து பார்த்தால் காலக்கணக்கற்ற நிலையைக் குறிக்கும். உண்மையில் உயிர்களெல்லாம் இறைவனுக்கு அடிமையே. அநாதி காலம் முதல் உயிர்களெல்லாம் இறைவனிடம் அடைக்கலம் புகுந்தவையே. இப்பூவுலகில் ஐந்து பூதங்களால் ஆகிய உடம்பைப் பெற்று, அதன் வழியாக பேசும்பொழுது வன்தொண்டர் உண்மையை அறியாமல் **''மறையோனே நீ பித்தனோ''** என்று கேட்கின்றார்.

காரைக்கால் அம்மையார் இறைவனுடைய திருவுருவத்தைப் பார்க்கின்றார். செக்கச் செவ்வல் என்ற திருமேனியிலே சிவபெருமானுடைய கழுத்தின் நீல நிறம் எடுப்பாகத் தோன்றுகிறது. அவனுடைய கண்டம் கறுப்பானதே ஓர் அருள் நிகழ்ச்சி அல்லவா? அவன் ''திறந்திகழும் மைஞ்ஞான்ற கண்டத்து

நல்வாழ்த்துக்கள்

''திருக்கோயில்'' தழைக்க நாளும் பொற்பணிகள் ஆற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றமைக்கு எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துகள் தெரிவித்து மகிழ்கின்றோம்.

வானோர் பெருமா''னாக விளங்குகின்றான். காரைக்கால் அம்மையாரோ பல பிறவிகளில் தீவிர தவம் செய்து இறைவனை நாடிஅடைந்தவர். இறைவனிடம் தஞ்சம் புகுவதில் அடைக்கலமாவதில் உள்ள இன்பம் அவருக்கல்லவா நன்கு தெரியும்! இப்பிறவி மட்டும் அல்ல பல பிறவிகளில் அவர் கல்வி கேள்விகளையெல்லாம் கடந்து, அன்பினால் உந்தப்பட்டு, இறைவனுடைய திருவடிகளைப் பற்றி நிலையான இன்பத்தைப் பெறுகின்றார். ''பிறந்து மொழி பயின்ற பின் எல்லாம் காதல் சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்''— அற்புதத் திருவந்தாதி. இறைவனது திருவடி சேர்ந்தவர் ''என் இடரை எப்போது தீர்க்கப் போகிறாய்'' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார். **''எஞ்ஞான்று தீர்ப்பது இடர்?''** அவருக்கு என்ன இடர் இருக்கக்கூடும்? தன்னை இறைவனுடைய திருவடிகளுடன் சேர்த்துக் கொண்ட பிறகு அவருக்கு என்ன குறை இருக்க முடியும்? தொண்டர்களுடைய மனதிலே எழும் குறை தான் இவருடைய மனதிலும் இருக்கின்றது.

இறைவனிடம் தான் முழுமையாக அன்பு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது ஏற்படும் தடைகளையெல்லாம் இறைவன் நீக்க வேண்டும். அதற்காக அவன் பெருங்கருணை காட்ட வேண்டும். அந்தக் கருணை சற்று குறைந்திருந்தாலும் அவர்களுடைய உள்ளம் தத்தளிக்கும், அதுதான் அவர்கள் படும் துன்பமும் ஆகும். இருந்தாலும் இறைவனிடம் அவர்களுடைய அன்பு குறைவதில்லை. சிவபெருமான் காரைக்கால் அம்மையாருடைய இடரைக் களையவில்லை என்றாலும், அவர்பால் இரங்கவில்லை என்றாலும், அம்மையாருடைய அன்பு, பக்தி என்றுமே குறையாது. அம்மையாருடைய நெஞ்சு, அவருடைய உயிர், உடல், உடைமை எல்லாம் சிவபெருமானுக்கே உரியது.

''இடர்களையா ரேனும், எமக்குஇரங்கா
ரேனும்,
அன்பு அறாது; என்நெஞ்சு அவர்க்கு''
(அற்புதத்திருவந்தாதி)

''அவருக்கே நாம் அன்பாவது, மற்றவர்க்கு ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆழ்'' என்று அம்மையார் கூறிக்கொள்கின்றார். ஏனென்றால், தலைதலைமுறையாக, பிறவிதோறும் அம்மையார் இறைவனுக்கு அடிமையாகிவிட்டார். அடைக்கலம் புகுந்துவிட்டார். **''அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம்''** என்று அம்மையார் விளக்குகிறார்.

''நானும் ஏழேழு பிறப்பாக சிவனுக்கு அடிமை'' என்று திருமூலரும் கூறிக்கொள்கிறார். ''என்னுடைய மூதாதையர்கள் எனது உயிரை அநாதியே சிவனுக்கு அர்ப்பணித்து விட்டார்கள். என் பெயரில் அவனுக்கு அடிமை என்கிற ஓலையும் அன்றே எழுதப்பட்டுவிட்டது. அனைத்து உலகத்தையும் படைத்த பிரம்மன் என்னுடைய அடிமைச் சீட்டை எழுதிவிட்டான். அதாவது, உயிர் தோன்றிய காலத்திலிருந்தே நான் சிவனிடம் அடைக்கலம் புகுந்தாய்விட்டது. இதற்கு சாட்சி வேண்டுமா? சாட்சியும் உண்டு. காக்கும் கடவுளாகிய திருமாலே நான் அடிமையானதற்கு சாட்சியாவான். படைக்கும் கடவுளும், காக்கும் கடவுளும், எல்லா உயிர்களும் சேர வேண்டிய இடம் அடைக்கலம் புக வேண்டிய இடம் இறைவனுடைய திருவடியே ஆகும் என்று உலகுக்கு கூறியவண்ணம் இருக்கின்றனர்.

''என்தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்
ஒன்றா யுலகம்படைத்தான் எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் ஏரெழுந் தாயே.''
(திருமந்திரம்....1876)

இறைவனிடம் அடைக்கலம்புகுதலும் இறைவன் ஆட்கொண்டான் என்ற உணர்வும் அடியார்களுடைய சாதனை நெறியின் சிறந்த அம்சங்களாகும். இங்கே ஒரு கேள்வி மனதிலே தோன்றுகிறது.. நான் என்றும்,

என்றும் நாடினால் அல்லவா அடைக்கலப்பற்று ஆட்கொள்ளப்பட்ட உணர்வு போன்றவை தோன்றும். இறைவனோ உயிருக்கு உயிராக இருக்கிறான். இங்கே அடைக்கலம் ஏது? ஆட்கொள்ளுதல் ஏது? இறைவனே அல்லவா சிந்தையுள் புகுந்து, பாச வேர் அறுத்து, சித்தத்தை சிவமாக்கி அருள் புரிந்து ஆட்கொள்கிறான், சிந்தையே கோவில் கொள்கிறான், உடலை இடமாகக் கொள்கிறான். மனம் பலவாறு சிந்திக்கின்றது. என்னதான் பதில்? பிரளய காலத்தில் ஏழு உலகங்களையும் வயிற்றில் வைத்து காப்பாற்றினான் கண்ணன். அவனே என் உயிருக்குள் வந்து கலந்து, உயிருக்குயிராக நிற்கின்றான். எனது உயிரை அவன் தனதாக்கிக் கொண்ட பிறகு நான் தனியாக மீள்வது என்று ஒன்றும் இல்லை. நீ எனது உயிருக்குள் உயிராக இருப்பவன். நான் உனக்கு எனது உயிரை தருகிறேன் என்று கூறுவதே பொருளற்றது. நான் யார்? எனது உயிர் யார்? இரண்டுமே நீயாகக் கொடுத்தவை. ஆகவே, அந்த இரண்டும் உனக்கே உரிமை என்றுதானே ஆகும். இது நம்மாழ்வார் அனுபவம். அவருடைய பக்திப் பெருக்கில் தோன்றிய ஒப்பற்ற அருள்மொழி அடைக்கலத்திற்கான காரணத்திற்கு தெள்ளத்தெளிவான விளக்கம்.

''எனதாவியுள் கலந்த பெருநல் உதவிக்
கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன் இனி மீள்வ
தென்பதுண்டே?
எனதாவி ஆவியும் நீ பொழிலேழும் உண்ட
எந்தாய்;
எனதாவி யார்? யான்ஆர்? தந்த
நீகொண்டாக்கினையே''
(திருவாய்மொழி)

அடைக்கல உணர்வின் உச்ச நிலையை அடைந்தவர் மாணிக்கவாசகப் பெருமான்.

''நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள்
ஆர்? என்னை யார் அறிவார்
வானோர்பிரான் என்னை ஆண்டிலனேல்?....''
(திருவாசகம்-திருக்கோத்தும்பி-216).

திருப்பெருந்துறைக் காட்சிக்கு முன்னர் அவருடைய வாழ்க்கை அருள் அனுபவம் பெறுவதற்கு அவரைத் தயார் செய்கிறது. திருப்பெருந்துறை அருள் ஆசிரியனால் கிடைத்த அனுபவம் அவருடைய வாழ்க்கையை மடைமாற்றுகிறது. மணிவாசகப் பெருமான் பேரானந்தத்தில் திளைக்கின்றார். அருள் அனுபவத்தை வாரி வாரி விழுங்குகின்றார். தனக்கும் இத்தகைய அனுபவம் கிட்டியதே என்று நினைந்து நினைந்து உருகுகின்றார். இத்தகைய அனுபவத்தைப் பற்றி வாழ்க்கையின் முற்பகுதியில்நினைந்துகூட பார்க்கவில்லையே என்று வருந்துகின்றார்.

'தெரியேன்: ஆ! ஆ! செத்தேன்; அடியேற்கு
அருளியது அறியேன்; பருகியும் ஆரேன்;
விழுங்கியும் ஒல்கில்லேன்;
(திருவாசகம்-திருஅண்டப் பகுதி)

(தொடர்ந்து வரும்)

மகாமக மகத்துவம்

தவத்திரு டாக்டர் சாயிமாதா

சிவபிருந்தாதேவி

உலகம் தோன்றிய காலத்திலிருந்து மனிதன் தன்னுடைய ஆற்றல், அறிவு, புத்தி கூர்மை, எதையும் நுணுக்கமாக உணரும்சக்தி, இவற்றின் காரணங்களால் விஞ்ஞானத் துறையில் மிகவும் முன்னேறி இன்று விண்வெளியில் சஞ்சரித்து இன்னும் சில ஆண்டுகளிலே அங்கேயே வாழும் வழிகளை வகுக்கவும் அவனால் இயலும் என்பதை நாம் பல்வேறு செய்திகள் வாயிலாக அறிகிறோம். ஆனாலும் இந்த அளப்பரிய ஆற்றல்களுக்கெல்லாம் மேலான, இவைகள் அனைத்தையுமே இயக்கி வைக்கும் உயர்ந்த சக்தி ஒன்று உண்டு என்பதை, யாரும் எவரும் எங்கும் எப்போதும் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது.

அது நம்கண்களுக்கு புலப்படாதது. சிந்தனா சக்தியினால் மட்டும் வந்தனை புரிந்து உணரக்கூடியது. அதனையே நாம் நம் நெஞ்சத்தில் அமர்த்தி, ''இறைவன்'' எனக் கூறுகின்றோம்.

இந்த இறைவன் என்று தோன்றினான்? நாம் என்று தோன்றினோம்? இந்த ஐய வினாகளுக்கு அருமையாகத் தாயுமானார் ஒரே வரியில் உன்னதமாக விடை பகருகிறார்.

''என்று நீ அன்றுநான் உன்னடிமையல்லவோ?''

ஆண்டவன் தோன்றிய அன்றே நான், இந்த 'நான்'வேறு யாருமல்ல, ஆண்டவனதுஅடிமை. இதனைவிட இந்த ''நான்'' என்பதற்கு வேறு மகத்துவம் வேண்டுமோ?

'நான்' என்ற ஒன்று ஆண்டவனிடத்தில் சங்கமம் ஆகின்றபோது அங்கு தானாக இறைவன், இறங்கியும்-இரங்கியும் வருகிறான். ''யானாகிய என்னை விழுங்கி வெறுந்தானாய் நிலை நின்றது தற்பரமே''.. அநுபூதியுணர்ந்த அருணகிரியின் அருள்வாக்கு இது.

இந்த அநுபூதியை நாமும் அடைய வேண்டும். மாடாக, ஆடாகப், பாம்பாகப், பல்லியாகக், கழுதையாக, நாயாகநாம்பிறக்கவில்லை. உயர்ந்து சிறந்து மேம்பட்டுள்ள மனிதப் பிறவியை நாம் பெற்றுள்ளோம். கண் குருடாக, காது செவிடாக வாய் ஊமையாக, கால் நொண்டியாக நாம் பிறக்கவில்லை. கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறந்திருக்கிறோம். இந்த நற்பிறவியில் தானம் எது? தவம் எது? என்பதைத் தாமறிந்து கொண்டால், வானவர் நாடு நமக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்குமெனஔவை மூதாட்டி அருளுகிறார் மனிதன் நினைத்தால் ''சிவமாம் தன்மை'' வரை உயரமுடியும். ஐந்தொழில் வல்லமை தவிர அவனது சாருப்யம் என்று சொல்லக் கூடிய சிவத்தன்மை நாம் சித்திக்கப் பெறலாம் என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். இதனையே மணிவாசகரும்,

''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி
எனையாண்ட
அத்தன் எனக்கருளியவா யார் பெறுவார்
அச்சோவே''

என்று அருளுகின்றார். இந்த வாய்ப்புகள், வசதிகள் பெற்ற நமக்கு மூர்த்தி, தலம், தீர்த்தம், முறையாய்க் கிடைத்து விட்டால் வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்த்துவிடுவார்.

இந்த மூன்றும் ஒன்றாக பெற்ற ஊர் கும்பகோணம், தரணிபுகழும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள இக்கும்பகோணம் பனிரெண்டாண்டுகளுக்கு ஒருமுறை உலகப் புகழ் பெறுகிறது. உலகம் இங்கு கூடுகிறது.

இந்தியா முழுவதும் இங்கு மகாமகத்திற்கு ஒன்று கூடுவதால் தேசிய ஒருமைப்பாட்டை மகாமகம் உண்டாக்குகிறது என்று சொல்லலாமா? உலகமேமகாமகத்திற்கு இங்கு வருவதால் உலக ஒருமைப்பாட்டை இம்மகாமகம் ஏற்படுத்துகிறது என்று கூறலாமா?

பிரம்மதேவனும் ஏனைய முப்பத்து முக்கோடி தேவர்களும் இவ்விழாவை நடத்துவதாகப் புராணங்கள் கூறுவதால் அண்டாண்ட

ஒருமைப்பாடு என்றும் எடுத்தோதலாமா? இம் மூன்றுக்கும் ஏற்புடைய இந்தியத் திருவிழா, தமிழகப் பெருவிழா கும்பகோணத்தில் நடக்கும் மகாமகவிழா.

பனிரெண்டாண்டுகளுக்கு ஒருமுறை பிருஹஸ்பதி சிம்ம ராசியில் வருகையில்-சூரியன் கும்பராசியில் சேரும் மாதமாம் மாசி மாதத்தில் மக நட்சத்திரம் கூடிய பௌர்ணமியில் மகாமகம் என்ற மகாப்புண்ணியத் திருவிழா நடைபெறுகிறது.

இராசிகள் பனிரெண்டு; மாதங்கள் பனிரெண்டு; ஆழ்வார்கள் பன்னிருவர்; துவாதச நாமம் பனிரெண்டு. மகாமகம் பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை வருகிறது. இந்தச் சதுர்யுகம் என்று சொல்லுகின்ற நான்கு யுகங்களும் எத்துணை எத்துணை மகாமகங்களைக் கண்டனவோ?

கிருதயுகம்	17,28,000	ஆண்டுகள்
திரேதாயுகம்	12,96,000	ஆண்டுகள்
துவாபரயுகம்	8,94,000	ஆண்டுகள்
கலியுகம்	4,32,000	ஆண்டுகள்
ஆக மொத்தம்	43,50,000	ஆண்டுகள்

நான்கு யுகங்களுக்கும் இப்படி எத்துணை எத்துணையோ சதுர்யுகங்களைக் கொண்டது இவ்வுலகு? சில ஆராயச்சி வல்லுனர்கள் 629 கோடி வருடங்களைக் கொண்டது இவ்வுலகு எனக் கூறுகின்றனர். அப்படியானால் எத்தனை மகாமகத்தை இப்புண்ணிய பாரதம் கண்டிருக்க வேண்டும்?

பாரதபூமியில் 7744 சிவாலயங்களும் 800 விஷ்ணு ஆலயங்களும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருந்தாலும் முழு பாரதத்திலும் உள்ள சிவ விஷ்ணு ஆலயங்கள் அனைத்தையும் நாம் அளவிட்டறிய இயலாது.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற அரிச்சுவடி அறச்சுவடியாகி ''ஆலயந்தொழுவது சாலவும் நன்று'' என்ற அமுத வாக்கினைக் கடைப் பிடிக்கச் செய்து, ஊருக்குத், தெருவிற்கு ஒரு கோயில் என்ற வகையில் பாரதம் திகழுகின்றது. இத்திருப்பதிகள் பலவற்றில், கும்பகோணம் என்ற திருத்தலத்தின் மகத்துவத்தைக் கேட்கும் போதே, வேத சாஸ்திரங்கள் அனைத்தையும் படித்துணர்ந்த பலனும், யாகங்கள் பலவற்றைச் செய்த மிகப்பெரும் பயனும், மற்றுமுள்ள அனைத்துத் திருத்தலங்களிலும் தீர்த்தமாடிய புண்ணிய பலனும் சித்திக்கின்றன எனச் சாத்திரங்கள் பல சான்றுகள் பகருகின்றன.

இமய முதல் குமரிவரை உள்ள பற்பல இனத்தார்கள். தத்தம் மதங்களைப் பல்வேறு வகைகளில் கடைப்பிடித்து அவரவர் வழிபாட்டையும் வெவ்வேறு விதமாகச் செய்து வருகின்றனர். மாறுபாடுகள் பல இருந்தாலும் வேறுபாடுகள் பலப்பல இருந்தாலும் பக்தி பண்ணுவதில் மட்டும் குறைவு கிடையாது. ''செய்யும் வினையனந்தம், கருத்தோவனந்தம், சுவர்க்க நரகமும் அனந்தம், நற்தெய்வமும் அனந்தம் பேதம் திகழ்கின்ற சமயமும் அனந்தம்'' எனத் தாயுமானார் சொல்லுவதைப் போல அனந்த பேதங்கள் மதங்களில் இருந்தாலும், பக்தியின் சக்திக்குக்குறைவே இல்லை.

இதனை உலகில் உள்ள ஜீவன்களும் உணர்ந்துள்ளன. ஜீவனானது அழிவில்லாத அமிர்தம். அதற்கு ஆசையும் இல்லை. உருவமும் இல்லை. மாயா உலகில் நவத்துவாரங்களோடு கூடிய பொய்ச் சடலத்தில் அச்சீவன் பிரவேசிக்கும்போது தான் ஆசையும் உருவமும் அச்சீவனுக்கு உண்டாகிறது. அச்சீவன் சுவர்க்கத்தில் இருப்பதும், திரும்ப உலகினில் வந்து பிறப்பதும், அவரவர் செய்த புண்ணிய பாவங்களைக் கொண்டதாகும்.

''புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனீ ஜடரே சயனம்''

என பகவத் பாதாளும் பஜகோவிந்தத்தில் இதனையே கூறுகின்றனர்.

''பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே'' என அப்பரும் இப்புவியினருக்கு அறிவிக்கின்றார்.

''யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனக்கென் கடவேன்;
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே எம்பெருமான் எம்
மானே உன்னருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே''

மஹாமக தீர்த்தத்தின் சிறப்பு

அன்யக்ஷேத்ரே க்ருதம் பாபம்
புண்யக்ஷேத்ரே விநஸ்யதி
புண்யக்ஷேத்ரே க்ருதம் பாபம்
வாரணாஸ்யாம் விநஸ்யதி
வாரணாஸ்யாம் க்ருதம் பாபம்
கும்பகோணே விநஸ்யதி
கும்பகோணே க்ருதம் பாபம்
கும்பகோணே விநயஸ்தி

பொருள் பின்வருமாறு

புண்ய க்ஷேத்திரங்களில் இருப்பவர்கள் செய்யும் பாபங்களை காசியில்சென்று ஸ்நாநஸ்தானங்கள் செய்தால் பாபங்கள் விலகிவிடும். காசியில் செய்யும் பாபங்கள் கும்பகோணம் வந்து ஸ்நாநஸ்தானங்கள் செய்தால் விலகிவிடும். கும்பகோணத்தில் செய்யும் பாவங்கள் கும்பகோணத்தில் தான் போகும். அதனால் காசியில் உள்ளவர்களும் மஹாமக ஸ்நானத்திற்கு இங்கு வருகிறார்கள்.

—எஸ். பஞ்சாபிகேச சிவாச்சாரியார்
பட்டீஸ்வரம்.

என அருளிய மணிவாசகரைப் போல அவனருள் பெற விரும்பும் அனைவரும் அதற்காவன, அப்போதைக்கு இப்போதே தேடியாக வேண்டும்.

அதற்குத் திருத்தலங்களின் தரிசனமே சாப விமோசனம், பாவ விமோசனமாகும். சீரும் சிறப்பும் வாய்ந்த பரத கண்டத்தில் எத்தனையோ தலங்கள் இருந்தாலும், காசி, கயை, பிரயாகை, ராமேசுவரம் ஆகியவைகளையே யாத்ரீகர்கள் தேடிப் போகின்றனர். சிவனடியார்களுக்கு சிவ சேத்திரங்களும், வைணவ அடியார்களுக்கு விஷ்ணு சேத்திரங்களும், பெரிது எனத் தோன்றும்.

சிவனடியார்களும், ஆழ்வாராதிகளுக்கும் பேதம் தோன்றாது அருமையாகச் சமத்துவம் நிரம்பிய திருத்தலங்கள் சிலவுண்டு. களங்கமிலாது பரிசுத்தம் பரிணமித்து நிற்கும் சமத்துவ சேத்திரங்களில் 'குடமூக்கு' எனப்படும் கும்பகோணம், மற்றைய திருத்தலங்களைவிட நூறு மடங்கு சிறப்புக் கொண்டது. இந்த திருத்தலத்தைச் சுற்றிச் சிவாலயங்களும் விஷ்ணு ஆலயங்களும் நிரம்பி வழிகின்றன. கங்கா நதி வடக்கே இமயமலையில் உற்பத்தியானாலும், இது காவேரி நதியினுள் ஐக்கியமாகிக் கும்பகோணத்திற்கு ஒரு பெரிய புகழைத் தருகிறது.

இந்தத் திருத்தலம் 18 சிவஸ்தலங்களால் சூழப்பட்டு மத்தியில் நிற்கிறது. கங்கா நதி காசியை எவ்வளவு மகத்துவம் உடையதாகச் செய்கிறதோ அதுபோல காவேரி கும்பகோணத்திற்கு மகத்துவத்தை அளிக்கின்றது.

காவேரி மேலை மலைத் தொடரைச் சேர்ந்த தலைக்காவேரி என்னும் இடத்தில் உற்பத்தியாகி மைசூர் மாநிலத்தின் தென் பகுதியாக பாய்ந்து வருகின்றது. வருகிற வழியில் கோயம்புத்தூர், சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் எல்லையாக ஓடி, திருச்சிராப்பள்ளி வழியாகத் தஞ்சாவூரில் புகுந்து பற்பல கிளைகளாய்ப் பிரிந்து இந்திய சமுத்திரத்தில் சங்கமமாகிறது. இதன் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து வங்களாக்குடாக் கடலில் சங்கமமாகும் வரை மத்தியில் உள்ள எல்லா இடங்களையும் செழிக்கச் செய்து 475 மைல்கள் ஓடிப் பிறகே கடலில் கலக்கிறது. தென் தேசங்களுக்கெல்லாம் தட்சிண கங்கையென்று விளங்கும் காவேரியாற்றின் வழி முழுதும் தூய்மையானதென்று மதிக்கப் பெறுகின்றது. ஒவ்வொரு வருடமும் துலா மாதமாகிய ஐப்பசியில் தீர்த்தமாடும் அனைவரும் பாவங்களைப் போக்கிக் கொள்ளுகின்றனர் எனக் காவேரிப் புராணம் சொல்லுகின்றது.

அகத்திய மாமுனிவர் எங்கும் சஞ்சரித்து வருகின்ற போது, மேலை மலைகளுக்கும் சென்றிருந்தார். அங்கிருந்த கவேரன் என்பவருக்கு காவேரி திருமகளாய் அவதரித்து இருந்தாள். அவள் பிறந்த அன்றிலிருந்து தந்தை கவேரனுக்குப் புகழும் பொருளும் குவிந்தன. மகள் காவேரியோ கைபுனைந்தியற்றாக்கவின் பெரு



— மகாமகக் குளம் —

வனப்பாய் விளங்கி நின்றாள். பிரமகிரியிலே இவள் தந்தையான கவேரன், ஐம்புலன்களையும் அடக்கி யோகத்திலிருந்தபோது காவேரி தன் பிதாவிற்குப் பூவுலகில் பெருங்கீர்த்தி உண்டாக்கவும், எல்லா மக்களும் அவரைத் துதிக்கவும் தக்கதாய்த் தான் ஒரு நதியாக அவதரித்து பூமிக்கு நன்மை புரிய ஆசை கொண்டாள். உலகிடைப் பிறக்கின்ற பெண்கள் எல்லோரும் தன் தந்தைக்குக் கீர்த்தி உண்டாக்க எண்ணிடில் இவ்வுலகு எவ்வளவு மேன்மையுறும்? காவேரி அரனை நோக்கித் தவமிருந்தாள். சிவன், தவத்திற்கு இறங்கியும், இரங்கியும் வருபவர். அவளுக்கு வேண்டிய வரம் அருளப் பெற்றது.

அகத்தியரோ இவளைத் தமக்கு மனையாளாகும்படி வேண்டினார். முதலில் காவேரி மறுத்தாள்; பின்னர் இசைந்தாள்-ஒரு நிபந்தனையுடன்! எந்நாளாயினும் ஒரு நாள் தன்னைத்தனியாளாக வைத்து, அகத்தியர் அகன்றால், தான் அவரை நீத்து அகலுவதற்கு அவரிடம் அனுமதி பெற்று, அகத்தியரை மணந்தாள். நெடுங்காலம் அகத்தியர் தமது வாக்கு அழியாமல் அவளைப் பிரியாமல் இருந்தார்.

ஒரு நாள் அவர், தமது ஆசிரமத்திலே தமது அருமைச் சீடருள் ஒருவரை வைத்துவிட்டு, அவர் பிரமகிரியிலே தமது திருக்குளத்திற்கு அருகாமையிலிருந்த நதியில் நீராடப் போனார். அவர் அகன்றவுடனே அவரது மனைவி, குளத்திலே விழுந்து மறைந்து, ஒரு நலமிக்க நதியானாள், நீர், குளத்தினின்றும் வழிந்து பெருகத் தொடங்கியது. அகத்தியருடைய சீடர் அதனை ஓடாமல்சிறை செய்ய முயல, அது தரையின் கீழாக ஊடுருவிப் பாய்ந்து சிறிது தூரஞ் சென்று வெளியே புறப்பட்டது. அகத்தியர் ஓடோடி வந்தார். தம்மைத் தனியே தவிக்க விட்டு ஏகாமல் தம்முடனிருந்து இல்வாழ்க்கை நடத்தும்படி வேண்டினார். காவேரிக்குத் தன் விருப்பையும் விடமனமில்லை. அகத்தியர் வேண்டுதலையும் மறுக்க முடியவில்லை. தன்னை இரு கூறாக்கினாள் கருணையுடைய காவேரி. ஒரு கூறு, காவேரி நதியாகப் பெருகியது. மறு கூறு, அகத்தியர் பத்தினியாய் நித்தமும் நித்தமும் அவர்பால் தங்கியது.

காவேரியின் உற்பத்தியாகும் இடத்திலிருந்து சங்கமமாகும் வரை உள்ள தீர்த்தங்கள் அனைத்தும் மேன்மையானவை. துலா மாத முழுக்கில், மக்கள் முழு பக்தி சிரத்தையுடன் நீராடுங்காலை, காவேரித் தாயின்அருட்கருணை அனைவர்க்கும் புரியும்.

காவேரி நதியால் சிறப்புற்றிருக்கும் பல திருத்தலங்களில் இக்கலியுகத்தில் மூன்றிடங்கள் சிறந்தவை எனச் சாத்திர வல்லுனர் சாதிக்கின்றனர். இவை கும்பகோணம், ஸ்ரீரங்கம், காவேரிப் பட்டினம் ஆகும். இம்மூன்றினுள்ளும் கும்பகோணமே உயர்ந்தது எனச் சொல்லுவோரும் உண்டு. தேவர்களும் வழிபடுகின்ற இந்த மகாசேத்திரம் விஸ்தீர்ணத்தில் பஞ்சக்ரோசம் கொண்டது.

காச்யபதீர்த்தம் (சோலையப்ப முதலி அக்கிரகாரக்கோடி) முதல் ஈசான தீர்த்தம் (பக்தபுரி ஸ்நான கட்டம்) வரையில் உள்ள கரைகளில் நீராடினால் கால நியமமின்றிப் புண்ணியம் கிடைக்கும் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

கும்பகோணத்தில் காவேரி நதி, கூடிய வரையில் அகலமுள்ளதாகவே இருக்கிறது. இங்கு அரிசி முதல் காய்கறி வரை உணவுப் பொருள்கள் மலிவாக இருப்பதாலும் வெயில் கோடைக்கும், மாரிக்கும் அதிகபேதப்படாமல் ஒரே சீராக இருப்பதாலும், நிறைய ஆலயங்களும், புண்ணிய நதியும் இருப்பதாலும் இங்கு வசிக்க அனைவரும் விரும்புகின்றனர். உலகத்தில் உள்ள நதிகளில் காவேரியைப் போலத் தன் நீரை-தண்ணீரை-ஒரு துளிகூட வீணாக்காமல் மனிதருக்குக் கொடுக்கும் ஆறு

வேறில்லை என்றே கூறலாம். இப்படிப்பட்ட காவேரியின் மீதுள்ள திருத்தலமே கும்பகோணமாகும். ஏமரிஷி முதலிய பல்லோர் வழிபட்ட தலம்.

இப்படிப்பட்ட அருமை பெருமைவாய்ந்த கும்பகோணத்தில், சூரியன் கும்பராசியில் சேரும் மாசி மாத மக நட்சத்திரத்தில் முழு நிலாவன்று பனிரெண்டாண்டுகளுக்கு ஒரு முறைநடைபெறும் மகாமக வைபவம் பற்றிச் சிந்திப்போம்.

இந்த மகாமக உற்சவம், ஒரு திருக்குளத்தில் நடைபெறும். ஆதி கும்பேசுவரர் கோயிலுக்குத் தென் கிழக்குத் திக்கில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. இதனைக் கன்யா தீர்த்தம் என்றும் கூறுவார்கள். இந்தத் தீர்த்தமாகிய மகாமகக் குளத்தில் ஒரு தடவை நீராடிய உடன் பஞ்சமகாபாதகங்களும் நசித்துப் போவதோடு நூறு மகா புண்ணியங்களும் சேருகின்றன.

இக்குளத்தைச் சுற்றிலும் கோயில்கள் இருக்கின்றன. இத்தீர்த்தத்தின் வடகரையில் விசுவநாதர் கோயில் இருக்கிறது. கிழக்கரையில் அமிருத நாயகர் கோவிலும் வடமேற்கு மூலையில் நாகேசுவரர் கோவிலும் இருக்கின்றன. இந்த நாகேசுவர சுவாமி கோயிலை திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்றுசொல்லுகிறார்கள். இது சூரியன் வழிபட்ட தலம். இங்கே ஒவ்வொரு வருடமும், சித்திரை மாதம் 11, 12, 13 தேதிகளில் காலையில் சூரிய கிரணம் சுவாமியின் சிரசில்படுகின்றது.

நாகேசுவரர் கோயிலுக்கு வடமேற்கு மூலையில் சோமலிங்கமும், இதற்கு வடக்கில் சாரங்கபாணி கோயிலும் இருக்கின்றன.

ஹேமரிஷி என்பவரின் தவம் பலித்ததன் காரணமாக, மகாசங்கராந்தியன்று விஷ்ணு பகவான் மகாலட்சுமியுடன் விமானத்தில், ஹேம புஷ்கரணியெனும் பொற்றாமரை கரையில் அந்த ரிஷிக்குப் பிரத்யட்சமாகி, ஸ்ரீசாரங்கபாணி ஸ்வரூபமாய் விளங்குகிறார்.

இந்தப் பொற்றாமரைக் குளத்திற்குமேல் கரையில் இருப்பது ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் கோயிலாகும்.

பிறவிப் பெருங்கடலிலிருந்து அனைவரையும் கரையேற்றி, ஞானவழியை அருளி பிரமன் முதலிய தேவர்கள் அனைவரும் வழிபட ஒளிச்சுடராய் பரமசிவன் ஆதி கும்பேசுவரராய் அமர்ந்திருக்கிறார்.

பிரளய காலம் வருவதற்கு முன்னர், பிரம்மா, ஆதியந்தமிலா அரும்பெரும் சோதியான பரம் பொருளிடஞ் சென்று, ''வேத சாத்திரங்கள், சிருஷ்டி பிஜம், தீர்த்தங்கள், சேத்திரங்கள் முதலியவை பிரளய காலத்தில் அழிந்து நசிந்துவிடா வண்ணம் பாதுகாக்க வேண்டு''மென வேண்டினார்.

''என்னால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டி பீஜம் நிலையானது; அதுஅழிவற்றது. புண்ணிய சேத்திரத்தில் உள்ள மண்ணினால செய்யப்பட்ட குடத்தில் சிருஷ்டி பீஜத்தை அமிருதத்தோடு கலந்து, அமிருதத்தை மத்தியில் அக்குடத்தில் வைத்து, அக்குடத்தின் உள்ளேயே வேத சாஸ்திர புராணங்களை பிரதிஷ்டை செய்து மகாமேரு மலையின் உச்சியில் வைத்துவிட்டு உமது இருப்பிடம் செல்க என்று பரமசிவன் அருளினார்.

அதன்படியே பிரும்மதேவரும், குடமொன்று செய்து அதனைப் பத்திர, புஷ்ப, பல உபவித, கூர்ச்சாதிகளால் அலங்கரித்து தர்ப்பைப் புற்களால் செய்யப் பெற்ற உரியில் வைத்து மகாமேருவின் சிகரத்தில் வைத்துவிட்டுப் புறப்பட்டார்.

காலம் குறுகியது. பிரளயம் வந்தது. பூவுலகம் முழுவதும் வெள்ளக்காடு ஆனது. நாடு, நகரம், வனம், வனாந்தரம் எல்லாம் பிரளயம். உலகமே நீருக்குள் மூழ்கிக் கிடந்தது.

பிரும்மாவால் மேருவின் சிகரத்தில் வைக்கப்பட்ட குடம் என்னவாயிற்று? மாயப் பிரபஞ்சத்தின் நிமித்தம், இறைவனாலே சிருஷ்டிக்கப் பெற்ற அந்தக்குடமானது, பிரளய காலத்துவெள்ளத்தில் அது வைக்கப்பட்ட நிலையிலிருந்து புரண்டு மிதக்கலாயிற்று. ஒருபுறம் பிரளயம், மற்றோர்புறம் சண்டமாருதம் அடித்துக்கொண்டு இருந்தது. வெள்ளக்காட்டில் ஆங்காங்கு சுழற்சிகளும், 'சோ' வென்ற இறைச்சலும் கூடியிருந்தன

மேருவின் சிகரத்திலிருந்து புறப்பட்ட குடமோ மெதுவாக மிதந்துகொண்டேவந்தது. அந்த மலைக்குத் தெற்கே வெகுதூரம் வந்துவிட்டது. பூர்வ சமுத்திரத்திற்குச் சிறிது மேற்காகக் குடத்தின் மேல் அலங்காரம் செய்யப்பட்ட கூர்ச்சமானது நழுவி விழுந்து அதிலிருந்து ''சாட்சீசுவரர்'' என்ற திருநாமத்துடன் இறைவர் தோன்றினார். இது இருப்பது கும்பகோணத்திற்கு ஒன்றரை மைல் தூரத்திலாகும்.

கூர்ச்சம் விழுந்த இடத்திற்குத்தென்கிழக்காகக் குடம் நின்று விட்டது. அத்தருணமே தேவர்கள் மலர்மாரி பொழிய, அந்த இடமே உத்தமமான சேத்திரம் என்ற அசரீரி வாக்கும் உண்டாயிற்று. தேவர்கள் ஒருபுறம் துதித்து நிற்க, மறறோர் புறத்தில் ஐயபேரிகை முழங்கியது.

பிரளயம் அடங்கிக் குடம் தரையில் நிற்கும் அச்சமயம் அதன் மீதிருந்த பழமானது தென்கிழக்காக விழுந்தது. அதுவே தற்காலத்தில் விளங்கும் அபிமுகேசுவரர்.

அதற்குப் பக்கமாகக் குடத்தில் இருந்த பத்திரங்கள் விழுந்தன. அவ்விடத்திலேதான் பாதாளமுக நாயகர் என்கிற விசுவநாதர் அமர்ந்தருளினார் என்பது ஐதிகம்.

குடத்தின் மீதிருந்த யக்ஞோபவீதம் (பூணூல்) விழுந்த இடத்தில் சூத்திரநாதர் என்ற பெயரோடு பரமசிவன் விளங்குவதாகக் கூறப்படுகிறது.

பிரளய காலத்தில் பிரசண்ட மாருதத்தின் வீச்சினால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற குடத்தினின்றும் சிதறிப்போன தெய்வீகப் பொருள்கள் ஒவ்வொன்றும் போய்ச் சேர்ந்த இடத்தில் சித்தமுத்த சுத்த சத்தான இறைவன் பல திருநாமங்களோடு விளங்குகின்றான்.

அமிருத குடமானது பொற்றாமரையில் வந்து புகுந்துதங்கியது. பரமசிவன் வேடஉருத் தாங்கி (கிராதவேடம்) தன் பரிவாரங்களோடு பூமண்டலம் முழுதுஞ்சுற்றிக் கடைசியில் இந்தக் கும்பம் இருக்கும் இடத்தில் வந்து சேர்ந்தார்.

உலகப் படைப்பை மறுபடியும் துவக்கும் பிரமன் முதலான தேவர்களைக் காப்பாற்ற சிவபரம்பொருள் மேற்குறித்த குடத்து அருகில் வந்து நூறு பாணங்களால்குடத்தைத் துளைக்க, அக்குடம் அசையாமல் இருந்தது, இறுதியில் சிவபிரான் தமது முழுப்பலத்தினாலும் அடித்ததும் உடைந்து, உள்ளிருந்தது ஒரு யோசனை தூரம் பரவியது. அது பரவிய விஸதிரணத்தைத்தான் தேவர்கள் ''பஞ்சக்குரோசம்'' என்று புகழ்ந்து பாடிவார்கள். கும்பம் பல கோணங்களில் சிதறியதால் கும்பகோணம் ஆயிற்றோ?

குடம் உடைந்ததும் பகவான் சிறிது மண்ணையும் மணலையும் அமிர்தத்தோடு கலந்து மாசி மாதம் பௌர்ணமி தினம் பகலில் ஒரு அங்கயாகப் பிடித்து உடைந்த குடத்தின் மீது வைத்து, அந்த லிங்கத்திற்கு அமிருதத்தினால் அபிஷேகம் செய்தார். அப்போது தேவர்கள் கீத மிசைத்தனர்; அப்சரகன்னியர் நடனமாடினர். குளிர்ச்சி பொருந்திய மந்த மாருதம் தாமும் வந்தோமென்று கமகமவென வீசியது. குட மல்லிகைகள் வெள்ளிக் காளாஞ்சி ஏந்துவது போல தலையவிழ்ந்து விண்ணுலகினின்று சரம்சரமாய் இறங்கி வந்து லிங்கத்தின் மீது குவிந்தன. இம்மலர்க் குவியலிலிருந்து மடை திறந்தாற்போல குபுகுபுவென குமிழியிட்டுப் பாயும் இனிய தேனினை உண்டு வண்டுகள் ரீங்காரம் செய்தன. மட மயில்கள் தோகை விரித்து வாகைசூடி ஆடின. இந்த இடத்திலே லிங்கம் ஆவாகனமாயிற்று. கயிலயங்கிரியிலிருந்தே உமையவளை வரவழைத்து கும்பலிங்கத்திற்கு வடக்குத்திக்கில் பிரம்ம தேவரால் பிரதிஷ்டை நடந்தது. இந்த வகையாக மாசி மக நாளில் விருஷப லக்னத்தில் பிரதிஷ்டையாகிக் கும்பேசுவரர் என்றும், மங்களாம்பாள் என்றும் திருநாமம்பெற்று விளங்குகின்றனர்.

உலகப்படைப்பிற்கு மூலகாரணமாக ஆதி குடத்தில் ஐக்யமானார் என்பதற்காகவே ஆதி கும்பேசுவரர் என்னும திருநாமம் வழங்குவதாயிற்று.

ஆதி விசுவேசுவரர்; இது கும்பேசுவரர் ஆலயத்திற்குத் தென்மேற்கில் உள்ளது. இவ்விடத்தில் தூமகேது முனிவருக்கு பரமசிவன் தரிசனங்கொடுத்து வரமளித்தார்.

அருள்மிகு

ஆதிகும்பேஸ்வரர் சுவாமி

பிரும்மகற்பம் ஒன்றில் சிவபெருமான் ஆணைப்படி கருவித்துக்களை பிரும்மதேவர் அமுத கும்பத்தில் வைத்து பாதுகாத்து வந்தார். ஒரு சமயம் பெரு வெள்ளம் ஏற்பட்டு அமுத கும்பம் மிதந்து வந்து இந்தத தலத்தில் தங்கியது. அது போது சிவபெருமான் தமது கணங்களைவேட்டுவ உருவுடன் தம்முடன் வரப்பணித்து தாமும் வேட்டுவஉருவுடன் இத்தலத்தின் வடமேற்கு பார்சத்திலுள்ள பாணபுரத்தில் எழுந்தருளி தமது அம்பினால் அமுத குடத்தை உடைத்தார். அதினின்று வெளிப்பட்ட அமுதத்தை இறைவர் கும்பத்துள் சேர்த்து லிங்க வடிவமாக்கித் தாமே பூஜை செய்து வழிபட்டு அச்சிவலிங்கத்திலேயே ஒன்றறக்கலந்து அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் எனத் திருப்பெயர் பெற்று பக்தர்களுக்கு என்றும் அருள்பாலித்து வருகிறார். இச்சோதி லிங்கமாகிய அருள்மிகு ஆதிகும்பேஸ்வரரை காட்டி அருளியவர் இத்திருக்கோயிலில் தனி சன்னதியில் அமர்ந்தருளும் அருள்மிகு கிராத மூர்த்தியே.''

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தேவி, தம்மை அன்போடு தொழுவோர்க்கு திவ்விய மங்களத்தை அளித்து வருவதால் ''மங்களநாயகி'' எனவும் சக்தி பீடங்களுள் ஒன்றாக விளங்குவதால் ''மந்திர பீடேஸ்வரி'' எனவும் திருப்பெயர்கள் பூண்டு தனிச் சிறப்புடன் விளங்கி வருகிறார்.

ஆறு திருமுகங்களையும், ஆறு திருக்கரங்களையும் கொண்டு விளங்குகின்ற ''அருள்மிகு கார்த்திகேயர்'' எழுந்தருளியிருப்பது இத்திருக்கோயிலின் தனிச் சிறப்பாகும். சைவ, சமய நாயன்மார்களான அப்பர், திருஞான சம்பந்தர் ஆகியோர் பாடியருளிய தேவாரப் பதிகங்களும், அருணகிரியார் பாடியருளிய திருப்புகழும், உலகப் புகழ்பெற்ற மகாமக சிறப்புகளுக்கு மூலகாரணமாக அமையப் பெற்றும் இத்தலம் தனிச் சிறப்புடன் விளங்கி வருகிறது.

வருகிற 18-2-1992 அன்று மகாமகத்தினத்தன்று பஞ்சமூர்த்திகளும் பல்வகை மலர்களால் அலங்கரிக்கப் பெற்று மகாமக குளத்திற்குக் கொண்டு வரப்பெற்று பகல் 12.00 மணிக்கு தீர்த்தவாரி நடைபெறும். இந்த மகாமகத்தை பொருத்தவரை அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் தான் முதன்மையான ப்ரதானமான சுவாமியாகும். அதுபோது குடந்தை நகரில் உள்ள சைவத்திருக்கோயில்களின் சுவாமிகளும் அலங்கரிக்கப் பெற்று தீர்த்தவாரிக்கு வரும். ஒரே நேரத்தில் இவற்றைக் காண்பதும், தரிசிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாகும். அன்றிரவு கைலாச வாகனத்தில் மலர்களாலும் மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப் பெற்று மகாமகக் குளத்திலிருந்து புறப்பட்டு திருக்கோயிலுக்கு வீதி உலா வரும்.

வராஹம்: மேற்சொன்ன திருத்தலத்திற்கு வடக்கில் மகாவிஷ்ணு வராஹ உருவத்துடன் பூதேவியுடன் இருப்பதாக ஐதீகம்.

லட்சுமி நாராயணம்; வராஹ திருத்தலத்திற்கு வடமேற்கு மூலையிலும் மஹா விஷ்ணு ஸ்ரீகாசியப முனிவருக்கு தரிசனம் கொடுத்த இடம் லட்சுமி நாராயணம் என்று வழங்கப்படுகிறது.

மதங்கா பீஷ்ட வரதர்; மதங்க மகரிஷிக்கு மகாவிஷ்ணு பிரத்தியட்சமான இடம், இது காவேரியின் வடகரையில் உள்ளது. மதங்கா பீஷ்ட வரதரென்று சுவாமியின் பெயர்.

ஸ்ரீசக்ரபாணி: சூரியனுக்கு அபீஷ்டத்தைக் கொடுத்துக் களிப்பிக்க வந்த மகாவிஷ்ணுவிற்கு ஸ்ரீசக்ரபாணியென்றே பெயர் விளங்குகிறது.

பாணலிங்கம்: ஸ்ரீசக்ரபாணி கோயிலுக்கு தென்கிழக்காக அஷ்டாதச ஸ்தானங்களில் உத்தமமாகவும், மேன்மை பொருந்தியதாகவும் உள்ளதலம், வியாச பகவானுக்காக வேண்டிக் கைலாயத்திலிருந்து வந்து பாணாசுரனால் பூஜிக்கப்பட்டபடியால் இங்கிருக்கும் ஈசுவரனுக்குப் ''பாணலிங்கம்'' என்று பெயர்.

சைவ, வைணவத் திருத்தலங்களாய் முக்கியமாக பனிரெண்டு வரை அடங்கியுள்ள மகா சேத்திரமே கும்பகோணமாகும். இந்த சேத்திரத்தின் மகத்துவம் சுற்றியுள்ள மூன்று யோசனை தூரம் வரை உண்டு எனப் பௌராணிகர் கூறுகின்றனர். இதன் மகிமை..

திரேதாயுகத்தில் 2 யோசனை தூரமென்றும் துவாபரயுகத்தில் 1 யோசனை தூரமென்றும் கலியுகத்தில் அரை யோசனை தூரமென்றும் சிலர் சொல்லுகின்றனர்.

ஆதிகும்பேசுவரரை, பிரும்மா ஆராதனை செய்து பிரதிஷ்டை செய்தபடியால் பரமசிவன் மனமகிழ்ந்து பிரும்மாவை நோக்கி, வேண்டும் வரங்களைக் கேட்கச் சொல்லுகிறார்.

பிரும்மா வேண்டிய வரங்கள் :

1. இது முதல் கும்பேசுவர தரிசனத்திற்கு யார் யார் வந்தாலும் அவர்கள் வியாதிகள் பல கொண்டவராயினும், பிறவிக் குருடரானாலும், நொண்டி முடங்களாக இருந்தாலும், எந்த இனத்தவராக இருந்தாலும், எக்குணம் கொண்டவராக இருந்தாலும், அவர்களைப் பேதா பேதமின்றி அவர்களதுகஷ்டங்களைத் தீர்த்து இஷ்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

2. பிரதோஷ புண்யகாலத்தில் தரிசனம் செய்கிறவர்களுக்கு பரமபக்தியைஉண்டு பண்ணி எல்லா நலங்களையும் ஈந்து இறுதியில் கைலாசத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

3. கார்த்திகை சோமவாரத்தில் ஒரு வில்வ இலையினால் அர்ச்சித்தாலோ அல்லது நெய் விளக்கு ஏற்றி வைத்தாலோ அப்படிச் செய்தவர்களுக்கு சிவசாயுஜ்யம் கிடைக்க வேண்டும்.

4. மாசி மாதத்தில் மக நட்சத்திரம் கூடிய பௌணர்மி தினத்தில் தேவரீரைத் தரிசிக்கிறவர்களுக்கு பிரம்மஹத்தி போன்ற தோஷங்கள் நீங்கவேண்டும்.

பிரம்மதேவர் மேலும் வேண்டினார் :

மாசிமக உற்சவத்தில் கொடும்பாவிகளாயினும் அவர்களது பாவங்கள் அனைத்தும் பறந்தோடிப் போக வேண்டும். இந்த உற்சவத்திற்கு தானஞ்செய்தோ மற்றும் உபயோகமாகிறஎத்தொழில்புரிந்தோ உதவுகிறவர்களுக்கும் தேவரீர் சாயுஜ்யம் கொடுக்க வேண்டும். பிரதி மாசி மகத்திலும் அமிர்தசரஸ் என்ற மகாமகக் குளத்தில் கங்கை வரும்படி செய்ய வேண்டும். அன்றைய தினம் அந்த மகாமகக் குளத்தில் நீராடுகிறவர்களின் எலலா எண்ணங்களும் நிறைவேறவேண்டும்.

வருடவாரியில் மகா ஸ்நானத்தை மகாமகக் குளத்தில் செய்வோர்க்கு 12 தப்த கிருச்சிர பலன் (12நாட்கள் நியமமாகச் செய்ய வேண்டிய விரதம். முதல் மூன்று நாள் ஜல பானத்திலும், அதற்கடுத்த மூன்று நாள் பால் பானத்திலும், அதற்கடுத்த மூன்று நாள் நெய் பானத்திலும், அதற்கடுத்த மூன்று நாள் வாயு பட்சணம் பண்ணுவதுமாக 12 நாள் கழித்து வருவதுடன், ஆகாரங்களை உட்கொள்ளும் சமயம் போக, பாக்கி நேரம் இறைவனைத் தியனிக்க வேண்டிய நியமமாகும்) உண்டென்பதை நிச்சயப்படுத்த வேண்டும். மகாமகத்தைக் குறித்து தியானித்தலும், வாசித்தலும், கேட்டலும், குடந்தை நகரில் உள்ளவர்களுக்கு மட்டுமேயல்லாது குவலயத்தில் உள்ள அனைவர்க்குமே பலனைக் கொடுக்கும் என்பது திண்ணம்.

இந்த உற்சவத்திற்கு வருகிறவர்களுக்கு பதினாயிரம் அசுவமேதயாக பலன் நித்திக்கும். கோடானுகோடி மக்களின் மனோரதம் நிறைவேறும். பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை வருகின்ற இந்த மகாமக உற்சவத்திற்காக நான் எல்லா தேவகணங்களோடு ஒரு வருடத்திற்குமுன்பே கும்பகோணத் திருத்தலத்திற்கு வந்து சேர்ந்து மஹோற்சவத்திற்கு வேண்டிய எல்லா கைங்கரியங்களையும் செய்து வைத்து விக்னமின்றி நிறைவேற்ற அருள்பாலிக்க வேண்டும்.

இந்த உற்சவத்திற்கு வரும் துன்மார்க்கிகளும் கூடச் சன்மார்க்கிகளாய் தெய்வ பக்தியோடிருக்கட்டும். முக்தி வேண்டுவோர்க்கு முக்தியும், சகலகார்ய சித்தி வேண்டுவோர்க்கு சித்தியும் அருள்புரிய வேண்டும். இதுவே எனது கோரிக்கை. நான் மன்றாடிக் கேட்பதும் இதுவே'' என பிரம்மா வேண்ட ஈசுவரனும் மனமகிழ்ந்து வேண்டிய எல்லாவரங்களையும் அருளினார். மோட்ச சாம்ராஜ்யத்தை அருளுகின்ற இந்த மகாமக மகோற்சவத்தை செய்து முடிக்க பிரம்மா கங்கணங்கட்டிக் கொண்டு முப்பதுமுக்கோடி தேவர்களுடன் பரசிவத்தின் முன்னர் துதித்து, மதித்துக் தோத்திரஞ் செய்து அவரது திருவருள் பெற்றார்.

அடுத்த இதழில் நிறைவுறும்.

சந்தனாசாரியர்கள் அருள் வரலாறு

அன்பு அருணாசல அடிமை

திருப்பாதிரிப்புலியூர்

அன்பு அருணாசல அடிமை

திருமுறைகள் பன்னிரண்டு

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம் முதல் மூன்று திருமுறைகள்; திருநாவுக்கரசு சுவாமிகள் மலர்ந்தருளிய தேவாரம் நான்கு, ஐந்து, ஆறு ஆம் திருமுறைகள்; சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் ஏழாந் திருமுறை; மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை; திருமாளிகைத் தேவர் முதலியோர் அருளிய திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறை; திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம்திருமுறை; திருவாலவாயுடையார் காரைக்காலம்மையார் முதலியோர் அருளியவை பதினோராம் திருமுறை; சேக்கிழார் சுவாமிகள் அருளிய • பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். இப்பன்னிரண்டு திருமுறைகளும், சைவ ஆண்மக்களும், பெண்மக்களும் இன்றியமையாது படித்தல் வேண்டுமென சான்றோர் கூறியிருக்கின்றனர்.

சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கு

அவையாவன: மெய்கண்டார் அருளிய சிவ ஞான போதம்; அருணந்தி சிவாசாரியார் அருளிய சிவ ஞானசித்தியார். இருபாஇருபஃது இதுவும் அருணந்தியார் அருளியது. திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார் அருளிய திருவுந்தியார். திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் அருளிய திருக்களிற்றுப்படியார். திருவதிகைமனவாசகம் கடந்தார் அருளிய உண்மைவிளக்கம். உமாபதி சிவம் அருளிய சிவப்பிரகாசம், திருவருட்பயன். வினாவெண்பா போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் ஆகியன. இச்சாத்திரங்கள் பதினான்கையும் சைவ ஆண்மக்களும், பெண்மக்களும் இன்றியமையாது ஆராய்ந்து கற்க வேண்டுமென சான்றோர்கள் கூறியுள்ளனர்.

''உந்திகளிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மைபிரகாசம்-வந்த அருட்
பண்புவினா போற்றி கொடி பாசமிலா
நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று.''

சைவசமயாசிரியர்கள்

சைவ சமயாசாரியர்கள் நால்வர். அவர்களாவார்; 1. திருஞானசம்பந்த சுவாமிகள், 2. திருநாவுக்கரசு சுவாமிகள்; 3. சுந்தரமூர்த்தி சுவாமிகள், 4. மாணிக்கவாசக சுவாமிகள்.

அகச் சந்தனாசாரியர்கள் நால்வர். அவர்களாவார்:

1. திருநந்திதேவர், 2. சனற்குமாரமுனிவர் 3. சத்தியஞானதரிசிணிகள் 4. பரஞ்சோதி முனிவர், இவர்கள் அகச் சந்தான பரம்பரையினர் ஆவர். வான்வழியே திரிபவராம். (அகம்-திருக்கயிலை அல்லது வானகம்.)

புறச் சந்தனாசாரியர்கள் நால்வர். அவர்களாவார்:

1. மெய்கண்டதேவர், 2. அருணந்திசிவம் 3. மறைஞானசம்பந்தர், 4. உமாபதி சிவாசாரியர், இவர்கள் நிலவுலகில் சித்தாந்த நெறியை ஒருவர், பின் ஒருவராயிருந்து பரப்பியவர்கள். அருள்ஞானம் பெற்றவர்கள்.

குறிப்பு: இவ்வாசாரியர் யாவரையும் தம்பரம்பரைக் குருவினராகக் கொண்டு சைவ ஆண் மக்களும், பெண் மக்களும் (ஆசாரியர்களெனக் கருதி) இன்றியமையாது போற்றல் வேண்டுமென சான்றோர்கள் கூறியிருக்கின்றார்கள்.

கீழ்க்காணும் திருப்பாடல்களை நுணுகி கவனிப்போமாக.

சமய குரவர் துதி

''பூழியர் கோன்வெப்பொழித்த புகலியர்
கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான்
அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்
போற்றி
ஊழி மலிதிருவாத வூரர் திருத்தாள்போற்றி.''

அகச்சந்தனாசாரியர்கள் துதி

அருட் குழக ரெழிற்கயிலை முக்காவல் நந்தி
பிரான்அடிகள் போற்றி
திருட்சிபெறு மனக்கமலசற்குமரமுனிவன்
திருத்தாள்போற்றி
இருட்டு மலத்தகல் சத்ய ஞானதரிசிணி
சரவணஇணைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி யருஞ்சீல குருபரன்
மலர்கள்போற்றி''

புறச்சந்தனாசாரியர்கள் துதி

''ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார்இணையடித்தாள்போற்றி
நாராண்டபல்லடியார்க்கு அருள்புரிந்த
அருள்நந்தி நற்றாள்போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்
செம்பதுமத்திருத்தாள்போற்றி.''

திருநந்திதேவர் வரலாறு:- திருக்கயிலைக் காவலர்; ஸ்ரீகண்ட பரமசிவனுக்கு அணுக்கர். திருநந்திதேவரின் ஆணையின்றி ஒரு ஈயுங் கயிலைத் திருமலையினுட்புக இயலாது.

ஒரு சமயம், இறைவிக்குப் போதித்துக் கொண்டிருந்த சித்தாந்த உண்மைகளை மறைந்திருந்து கேட்ட பிழை காரணமாகப் பூவுலகில் வாழுமாறு நந்திதேவர் இறைவனால் சபிக்கப்பெற்றார்.

திருவையாற்றில் சிலாதரமுனிவருக்குப் புத்திரராகத் தோன்றினார். சுயம்பிரபை என்ற அம்மையாரைத் திருமணம் புரிந்து கொண்டார். இறைவன், ஐயாறப்பனே எழுந்தருளி ஊர்வலங்கண்டதாக வரலாறு. இந்த நிகழ்ச்சியே ஆண்டு தோறும் சித்திரை நிறைமதியோடு முடிவடையும் பத்து நாள் விழாவில் ஏழூர் விழாவாக நடைபெறுகிறது. இது திருநந்திதேவர் திருமண ஊர்கோலம்.

1. திருவையாறு, 2. திருச்சோற்றுத்துறை 3. திருப்பழனம், 4. திருக்கண்டியூர், 5. திருவேதிகுடி, 6. திருப்பூந்துருத்தி, 7. திருநெய்த்தானம் ஆகிய ஏழு ஊர்களே சப்தஸ்தானம். இவ்வேழு ஊர்களுக்கும், திருமழபாடியாம் சுயம்பிரபையம்மையாரின் தாய் வீட்டு ஊருக்கும் திருநந்திதேவர் திருமணக்கோலத்துடன் ஒரு பல்லக்கிலும், ஏனைய ஏழு ஊர் மூர்த்திகளும் தனித்தனி பல்லக்கிலும், எழுந்தருளி இவ்வெல்லா ஊர்களுக்கும் விழாக் கொண்டருள்வது இன்றும் நடைபெறும் விழாவாகும்.

அதிகாரநந்தி : நான்கு திருக்கரங்கள், நெற்றிக்கண், மான், மழு சேர்த்த மேற்கைகளுடன் விளங்குபவர் அதிகார நந்தி எனப் போற்றப் பெறுவார். இவர், கயிலைத் திருமலை அதிகாரங்கள் அனைத்தும் பெற்றவர். தேவபூத-பைசாச - இயக்க - கின்னர-கருட-கந்தர்வ கணங்களுக்கெல்லாம் தலைவர்.

மால்விடை: ''தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில் இடபமாய் தாங்கினான் திருமால்''..... ஆதலால் திருமாலும் இடபம் ஆதல் உண்டு.

ஈசர்திருவடிதாங்கும் பேறு பெற்று முதற் குருநாதராம் சிறப்பு திருநந்திதேவர்க்கே உரியது.

2. சனற் குமாரமுனிவர், 3. சத்திய ஞான தரிசிணிகள், 4. பரஞ்சோதி முனிவர், ''விண் செலல்மரபின் ஐயர்'' எனத் திருமுருகாற்றுப் படைகூறுமாறே இம்மூவரும் அந்தரத்து (வான் வழி) இயங்கும் ஞானிகளாம். இவர்களது வரலாறுகள் ஏதும் கிடைத்தில.

ஆயினும் 4-ஆம் அகச்சந்தனாசாரியராகிய பரஞ்சோதி முனிவர் வான்வழியே ஏகுங்கால் மன்பதைகள் உய்யவேண்டி, அப்போது திருவெண்ணெய் நல்லூரில் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சுமார் மூன்று வயது பாலகராம் சுவேதவனப்பெருமாளுக்கு சிவதீட்சை புரிந்தருளி, ஆகமசாரமான சித்தாந்தத்தினை உபதேசித்து விட்டு வான் வழியே மீண்டு விட்டார். அவர் சூட்டிய திருநாமம் மெய்கண்ட தேவர். இப்படியாக மெய்கண்டதேவர் வரலாற்றிலே பரஞ்சோதி முனிவரைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது.

புறச்சந்தனாசாரியர்கள் வரலாறு

1. மெய்கண்ட தேவர் இவர் காலம் கி.பி.13-ஆம் நூற்றாண்டு. திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்திருந்த அச்சுதகளப்பாளர் நெடுநாள் பிள்ளை பேறின்றி வருந்தினார். தம்குடிக்கும் பிற வேளாண் குடிகட்கும் தீட்சை செய்து வைப்பவராகிய திருத்துறையூர் அருணந்தி சிவாச்சாரியாரிடம் தம் குறையை விண்ணப்பித்தார். அவர் இறைவன் திருவருளை மனத்து உன்னித் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தபோது

''பேயடையாபிரிவெய்தும் பிள்ளையினோடு
உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர், ஐயுறவேண்டா
ஒன்றும்;
வேயனதோள் உமை பங்கன்வெண்காட்டு
முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயவாம்
தீவினையே.''

என்ற திருஞானசம்பந்தர் திருப்பாசுரம் கிடைத்தது.

அதன் கருத்துப்படியே திருவெண்காடு சென்று அங்கு உள்ள சோமகுண்டம், சூரிய குண்டம், அக்கினி குண்டம் எனும் மூன்று குளங்களிலும் நீராடி இறைவனை வழிபட்டு வந்தால் மனக்கருத்து நிறைவேறும் என்று கூறினார் அருணந்திசிவம்.

களப்பாளரும் அவர் தம் துணைவியாரும் அவ்வண்ணமே திருவெண்காடடைந்து முக்குள நீராடியும் வெண்காட்டீசனை வழிபட்டும் சில காலம் தவங்கிடந்தனர். அதன் பயனாக அவர்கட்கு ஓர் ஆண்மகவு தோன்றியது. அக்குழந்தைக்குச் ''சுவேதவனப் பெருமாள்'' என வெண்காட்டீசன் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர்.

அச்சுத களப்பாளர் காலமாகிவிடவே அம்மையார் குழந்தைக்கு சுமார் மூன்று வயது நடைபெறுங் காலத்திலே தன் தாய்வீடமைந்த திருவெண்ணெய் நல்லூருக்கு சென்றிருந்தார்.

அவ்வூர் திருவீதியில் விளையாடிக்கொண்டிருந்த சுவேதவனப் பெருமாளை வான் வழியே சென்று கொண்டிருந்த (நான்காவது அகச்சந்தானாசாரியராம்) பரஞ்சோதி முனிவர் கண்டார். அப்பிள்ளை கருவிலே திருவுடையராய் முன்னைத் தவப்பேறு வந்துற்று உபதேச பரிபக்குவ நிலையில் உள்ளமையறிந்தார். நிலவுலகு வந்துற்றார். திருக் குழந்தைக்கு நயனதீட்சை முதலியன புரிந்தருளித் திருச்செவியில் உபதேசமும் புரிந்தருளி, ''மெய்கண்டார்'' எனத் தீட்சா நாமமும் சூட்டி விட்டுத் திருக்கயிலை நோக்கி வான் வழியே ஏகினார்.

குழந்தை அப்போதே நிட்டை கூடிப்பல உண்மைகளையும் உணர்ந்தார். தம்மைஅடுத்த பக்குவிகளுக்கு உபதேசம் புரிந்தருள்வதைக் கைக்கொண்டு விளங்கினார். சிவஞானபோத நூல் பன்னிரு சூத்திரங்களையும் அதன் வார்த்திகமும் அருளியுள்ளார்.

2. அருள்நந்தி சிவாசாரியார்

இவர் காலம் 13-ஆம் நூற்றாண்டு இவர் திருத்துறையூரினர்., வேத ஆகம, புராண வல்லமை பெற்றவர். பற்பல இடங்களிலும் சீடர்களைப் பெற்றவர். அவர்களுக்குச் சிவ தீட்சைபுரிதலையே கடமையாகக்கொண்டவர். பலகலைகளினும் வல்லவராதலால் ''சகலாகம பண்டிதர்'' எனும் சிறப்பு பெற்று விளங்கினார். தாம் செல்லும் இடங்கட்கெல்லாம் பல நூற்சுவடிகளைச் சகடத்தில் (வண்டியில்) எடுத்துச் செல்லுவது வழக்கம். வித்யாகர்வம் கொண்டவரென்று கருதப்படுபவர்.

ஒருநாள் மெய்கண்ட தேவர் உபதேசம் புரிந்தருள்வதை இவர் கேட்க நேர்ந்தது. அப்போது அவர் ஆணவ மலத்தின் தன்மை

பற்றி உபதேசித்துக் கொண்டிருந்தார். சற்றே எட்ட இருந்து கொண்டு அவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அருணந்திசிவம், தன் சிஷ்யர் மகன்தானே இச்சிறுவர்! தான் கூறிய வாறே இவர் தந்தை ஒழுகிய காரணத்தா லன்றோ இத்தகைய சிறந்த குழந்தை தோன்றி யது எனக்கருதினார். இவர் தலைகுனியுமாறு ஓர் வினா எழுப்புவன் என நினைத்து, ''ஆணவத்தின் உருவம் இன்னதென விளக்கக் கூடுமோ?'' என வினவினார்.

அதற்குச் சிவஞானச் சிறுவர், வாயால் விடை ஏதுங் கூறாமல் தன் வலக்கைச் சுட்டு விரலாற் சுட்டி அவரையே குறிப்பிட்டார். தலைகுனிவு தனக்கே விளைவித்த அந்நிகழ்ச்சி யால் ஆணவம் ஒழியத்தன் நிலை உணர்ந்தார். அருள்நந்திசிவம் அடியற்ற மரம்போல் வீழ்ந் தார். போதிப்பிள்ளையின் திருவடி தொழுது, கண்ணீர்வார மெய்ம்மயிர் பொடிப்பதன்னை யும் ஓர் மாணவனாக ஏற்றருளுமாறு விண்ணப் பித்தார்.

பிள்ளையும் ஏற்றருளினார். மெய்ஞ் ஞானம் கைவரப்பெற்ற அருணந்தி சிவம் தன்குருநாதர் மெய்கண்ட சிவாசாரியார் அருளிய சிவஞானபோத நூலை ஐயந்திரிபற பயின்றார். நிட்டைகூடி ஞானாநுபவ சீட ரானார். தன் குறிக்கோளை நிலைநாட்டச் சித்தாந்த சைவ சமய விளக்கம் மட்டும் போதாதெனக் கருதினார். அகச் சமயம், புறச்சமயம், அகப்புறச்சமய நிலைகளையும், கொள்கைகளையும் நன்கு உணர்ந்தால் அன்றி உண்மைச் சைவ நெறியின் சிறப்பு புலனாகா தெனப் பரபக்கம் செய்தார். தன் ஞானகுரு வின் சிவஞான போதத்தை முதல் நூலாகக் கொண்டு சைவத் திறத்தினைச் ''சிவ ஞான சித்தியார்'' எனும் விளக்க நூலாகச் செய்தார். இவை 629 திருவிருத்தங்களைக்கொண்டவை.

''போதம் மிகுத்தோர், தொகுத்தபேதை
மைக்கே
பொருந்தினோர் இவர்க்கன்றிக்
கதிப்பாற்செல்ல
ஏதுநெறிஎனுமவர்கட்குஅறிய, முன்னாள்
இறைவன் அருள் நந்தி தனக்கு இயம்ப,
நந்தி
கோதில் அருட் சனற்கு மாரர்க்குக் கூறக்,
குவலயத்தின் அவ்வழிஎம்குருநாதன்கொண்டு
தீதகல எமக்களித்த ஞானநூலைத்
தேர்ந்துரைப்பன், சிவஞானசித்தி
என்றே''.

என்று சிவஞான சித்தியார் குறிப்பிட்டிருத்த லும் கருதற்பாலது. மேலும் ''பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதிபோதும்''.....என்றும் ''வள்ளு வர் நூல் அன்பர் மொழி வாசகம் தொல் காப்பியமே தெள்ளுபரிமேலழகன் செய்தஉரை ஒள்ளிய சீர்த் 'தொண்டர்புராணம்தொகுசித்தி ஒராறும் தண்டமிழின் மேலாந்தரம்'' என்றும் ஆன்றோர்களால் போற்றப் பெறும் நூல் செய்த பெருமை அருள்நந்தி சிவாச்சாரி யாரைச் சாரும்.

இவரால் 14 சாத்திர நூல்களில்மற்றொரு (சுருக்கம்) நூலான ''இருபா இருபஃது'' எனும் நூலும் இயற்றப்பட்டுள்ளது.

3. **மறைஞான சம்பந்தர்** : இவர் ஒரு வேளாளர். திருத்துறையூர், அருணந்தி சிவத்தின் சீடர். ஞானம் நிரம்பப்பெற்று நிட்டை அடைந்தவர். ஸ்ரீமந்நடராஜ தரிசனம் வேண்டித் திருத்தில்லையடைந்தார். அங்கு ஒரு வீட்டுத் திண்ணையிலிருந்து கொண்டு தம்மையடுத்து வந்து வினவியவர்களுக்குச் சிவஞான உண்மைகளை விளக்குவார்.

ஒரு நாள் அங்ஙனம் இருக்குங்கால், ஸ்ரீமந் நடராஜருக்கு அன்றைப்பகல் பூஜையைமுடித்த தில்லை மூவாயிரவருள் ஒருவரான உமாபதி சிவாசாரியார், அந்நாளைய வழக்கப்படி தீவர்த்தி, மேளம் முதலிய விருதுகளுடன் தம் திருமனைக்குப் பல்லக்கில் சென்று கொண் டிருந்தார்.

''இதோ பகற்குருடன் போகிறான் பார்'' எனக் கூறி அவரைச் சுட்டிக் காட்டினார் திண்ணையிலிருந்த மறைஞான சம்பந்தர். அது கேட்ட உமாபதி சிவம் கீழே இறங்கினார். தன் கல்வி முதலியவற்றையும் உண்மை ஞானம் உணராத சிறுமையையும் எண்ணிவெட்கினார். அவர் திருவடிகளில் வீழ்ந்து, தம்மை மாணவ னாக ஏற்கும்படி விண்ணப்பித்துக் குறையிரந் தார்.

மறைஞான சம்பந்தரும் அவரது, கல்விச் சிறப்பையும் ஞானதாகத்தையும் அதனை அவாவி நிற்கும் வேட்கையையும், பரிபக்குவ நிலையையும் சிந்தித்து உணர்ந்து தீட்சை புரிந்தருளிச் சீடராக ஏற்றுக் கொண்டு சிவ தத்துவத்தை போதித்தருளினார்.

தம் நிட்டை, தனிமை வேண்டிச் சிதம் பரத்தையடுத்துள்ள திருக்களாஞ்சேரியில் (இப்போது, சிதம்பரத்தின் வடமேற்கில் சுமார் 8 கி.மீ. தொலைவில் சிங்காரத் தோப்பு என வழங்குகிறது) ஓர் சிவாலயமும் திருக்குளமும், அதன் ஒருபால் இவருடையசமாதியும் விளங்கி வருகின்றன. மறைஞான சம்பந்தர் நிட்டை கூடியிருந்து அம்பலவாணர் திருவடி நீழல் அடைந்தார்.

இவரது பிறப்பிடம் பெற்றோர் விவரம், காலம் முதலியன அறியுமாறில்லை. அவர் செய்த நூலும் ஏதும் இருந்து வருவதாகவும் தெரியவில்லை.

4. **உமாபதிசிவாசாரியார்** : இவர் காலம் 14-ஆம் நூற்றாண்டெனத் தெரிகிறது. திருத்தில்லை மூவாயிரவர் வழி வந்தவர். நடராஜரைப் பூசிக்கும் முறை உரிமை பெற்றவர். வேத, ஆகம, புராணக் கல்வி உடையவராகியிருந்தார். ஞானம் நிரம்பியவர்.

முன்மறைஞான சம்பந்தர் வரலாற்றில் குறிப்பிட்டவாறு அவருக்குச் சீட்ராகி சைவ முறைப்படி ஒழுகத் தொடங்கினார். இவர் தம் மரபினர் ஒழுகிய கட்டுப்பாடுகளினின்று விலகி, ஒரு வேளாளரை அடிபணிந்து தொண்டரானதாலும், தமிழ்மறையாம் திருமுறைகளில் ஈடுபட்டதாலும், சபாநாயகரது பூசை யுரிமை இவர் மரபினால் இவருக்கு மறுக்கப்பட்டது. மேலும் நகர எல்லைக்குள் வசிக்கவும் கூடாதென்று புறத்தே போகச் செய்து விட்டார்கள். ஆகவே உமாபதி சிவம் சிதம்பரத்துக்கு கீழ்பால் கொற்றவன் குடியை வாழ்விடமாக்கிக் கொண்டார்.

அங்குபோய் வசித்துக் கொண்டு சாத்திர தோத்திர புராணங்களில் மிகச் தேர்ச்சியுற்று முன்னோர் நூல்களை யொட்டி பல நூல்களைத் தமிழில் ஆக்கும் பணியிலும், தன்னைச் சார்ந்தோர்க்குத் தீட்சை புரிந்து சிவ நெறியில் நிறுத்தியும், சித்தாந்த சைவப் பேருபகாரியாக வாழ்ந்து வந்தார்.

அத்தகைய காலத்திலே மார்கழித் திருவிழா வந்துற்றது. அந்த விழாவிற்கும் கொடியேற்றும் முறைஇவருடையதாயிருந்தது. ஆனால் ''ஜாதிப்பிரஷ்டம்; ஸ்தலப் பிரஷ்டம்' செய்யப்பட்ட இவர் அழைக்கப் பெறவில்லை. அடுத்த முறையாளர் நியமிக்கப் பெற்றார். பூர்வாங்க கிரியைகள் யாவும் முடிக்கப் பெற்று கொடியை ஏற்ற முனைந்தபோது அக்கொடி ஏறவில்லை. என்னென்னவோ முயன்றும் கொடியேறாது போகவே யாவரும் மிக வருந்தினர்.

அப்போது 'உமாபதிசிவம் வந்தால் கொடி ஏறும்' என ஓர் அசரீரி எழுந்தது. யாவரும் கேட்ட அவ்வொலியைப் பின்பற்றிப் பல பெரியோர்கள் கொற்றவன் குடிக்குப் போனார்கள். உமாபதி சிவத்திடம் நடந்தவை யாவும் கூறிக் திருக்கோயிலுக்கு வருமாறு வேண்டினார்கள்.

ஆணவத்தால் மூடப்பட்டு உயர்வு தாழ்வுகளை மனிதரிடையிலும், மொழிகளியிடையிலும் கற்பிக்கும் இவர்களிடையே இறைவனைக் காண இயலாதென்றும், மலமொழிந்து இறைவனாற் படைக்கப்பெற்ற மனிதரும் மொழிகளும் சமமானவை என்று உணர்ந்தோரிடையில் அறிவே வடிவான ஆண்டவன் இலங்குவான்; அங்குதான் அவனைக் காணலாமென்றும் திருவுள்ளத்தில் உறுதி கொண்ட காரணத்தால் அங்கு எழுந்தருள மறுத்துவிட்டார் உமாபதிசிவம். கீழ்க்காணும் திருமந்திரப் பாடலும் நம் கவனத்திற்குரியதாகும்.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

நன்றே நினைமின் நமனில்லை நாணாமே

சென்றே புகுங்கதி யில்லை நுஞ்சித்தத்து

நின்றே நிலைபெற நீர்நினைந்துய்மினே''

வந்த பெரியோர்கள் (வயதால்-பொருளால் மட்டுமே) விழாதடைப்படுமெனக் கூறி மீண்டும் வற்புறுத்த இந்தச் சிவம் அந்தச் சிவத்தினைத்தியானித்துக் ''கொடிக்கவி'' என்ற சிறு (சித்தாந்த) நூல் ஒன்றினைப் பாடினார்.

கோயிலுக்கு சற்றேறக்குறைய 3 கி.மீ. தொலைவிலிருந்துகொண்டு இவர் பாடப்பாட அங்கு கொடியேறிவிட்டது. கண்டோர் பரவசமெய்தினர். அந்தக் 'கொடிக்கவிப்' பாட்டுகள் நான்கனுள் ஒனறினைப் பார்த்து, படித்து, நாமும் பரவசம் அடைவோமாக.

''அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்
தும் நாலெழுத்தும்

பிஞ்செழுத்தும் மேலை பெருவெழுத்தும்-
நெஞ்சமுத்திப்

பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்

கூசாமற் காட்டக் கொடி.''

இத்தகைய இவரது சிறப்புக்களை அறிந்த பலர் இவருக்கு அடிமையாகித் தொண்டு பூண்டு ஒழுகினர். பக்குவிகட்கு ஞான உபதேசமும் செய்து வருவாராயினார்.

''பெற்றான் சாம்பன்'' என்றொரு தீண்டாத மரபினர் உள்ளத்தாற் பரமனிடம் பேரன்பு பூண்டவர் தமக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் திருமடத்திற்கு விறகு தரும் ஒழுக்கம் பூண்டிருந்தார், அவரது பரிபக்குவ நிலைகண்ட ஸ்ரீகண்ட பரமசிவனார்

''அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க்கெழுதியகைச் சீட்டு-படியின்மிசை
பெற்றான் சாம்பற்குப் பேதமறத் தீக்கை
செய்து
முத்தி கொடுக்க முறை.'' என்றெழுதிய ஓலை யொன்றை அவர் கையகப்படுமாறு செய்து, அதனை ''உமாபதி சிவத்திடம் கொடுக்க'' எனவும் திருவாக்கருளினார்.

பெற்றான் அவ்வண்ணமே செய்தார். உமாபதி சிவனார் அவருக்கு நயனதீட்சை முதலிய செய்வித்து அப்போதே முத்திக்குச் செல்ல விடுத்தார்.

அவருடைய மறைவினை வேறு விதத்தில் கருதிய அவரது உறவினர்க்கு அவ்விடத்திலே பசுமையாக இருந்த ஓர்முள்ளிச் செடியின் பரிபக்குவ நிலையுணர்ந்து முத்தியடைவிக்க, அது அங்கேயே நெருப்பின்றிச் சாம்பலாயிற்று. யாவரும் உமாபதி சிவனார் திருவடி பணிந்து மீண்டனர். வாழ்க சீர் அடியாரெல்லாம்.

சந்தனாசாரியர்கள் சுருக்க வரலாறு முற்றுப் பெறுகிறது.

சுற்றாலயம்

ஞானச்சேரி ஞானிகள்,
வேளச்சேரி ஆசிரமம்.

சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளுகின்ற மனிதர்கள் தங்களது வீட்டைச் சுற்றி ஒரு வெற்றிடத்தை வைத்துக்கொண்டு அதைச் சுற்றி ஒரு சுவர் கட்டிக் கொள்ளுகிறார்கள். சொந்த வீட்டைச் சுற்றிப் பார்ப்பதற்கு இந்த வெற்றிடம் உதவுகிறது. சொந்த வீட்டிற்கு இப்படி ஒரு இடம் இருப்பது போல் கோயிலைச் சுற்றி...சுற்றுகின்றவர்கள் நடப்பதற்கு ஒரு இடமும் ஒரு மதிற்சுவரும் உள்ளது.

இந்த திருச்சுற்றாலயம் எதற்காக? கல்லினால் வடித்த சிலைகளைச் சுற்றி வருவதற்காகவா? அல்லது வசிக்கும் மனிதர்களுக்கும் கடவுளுக்கும் வித்தியாசம் தெரிவதற்காகவா? இப்படி ஒரு அறிவை கேள்வியாக எழுப்பிக் கொண்டான் ஒருவன். கடவுளை உணர்ந்த மற்றொருவர் அவனைக் கண்டு மகிழ்ந்தார்.

அவன் திருப்தி அடையும் வண்ணம் பதில் கூறினார். சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் அறிவாக எண்ணாதே. அதை வைத்து வினா எழுப்பினால் கடவுட்துறையில் பதில்கள் கிடைக்காது...என்று சொன்னார். கடவுளை அறிந்தவர்களின் பதில்கள் தேன்கூட்டில் சேமிக்கப்பட்ட தேனைப் போன்றது. இறைவனைக் கும்பிடுகின்ற மனிதனுக்கும்கும்பிடாத மனிதனுக்கும் கும்பிட எண்ணுகின்ற மனிதனுக்கும் புத்தி ஒன்று தான். அது ஒன்றே பொதுவானது.

பொதுவாக இருக்கின்ற புத்திக்கு மூன்று நிலைகள் உண்டு. முதலிலே மனிதன் அறிவை பெற வேண்டும். அதுவே முதல்நிலை. இரண்டாவதாக அறியும் நிலை என்ற அறிவை முடித்துக் கொண்டு புத்தியைப் பெற வேண்டும். இதுவே இரண்டாவது நிலை. இதன் பிறகு புத்தியே தெளிவாக மாறும்பொழுது ஞானம் ஏற்பட்டு விடுகிறது. இதுவே மூன்றாவது முழுநிலை.

கோயிலுக்கு வெளியிலே உள்ளது ஒரு இடம். கோயில் மதிற்சுவரருகே உள்ளே சுற்றி வருவது இரண்டாவது இடம். கோயிலுக்குள் மையப்பகுதியிலே உள்ள ஆண்டவன் மூன்றாவது இடம். புத்தியே ஞானமாக மாறுகிறது. தெளிவை முழுமையாகப் பெறுகின்ற ஒரு புலனிற்கே புத்தி என்று பெயர். இந்தபுத்தியை நழுவ விடாமல் அறிவையும் பெறலாம். ஞானத்தையும் பெறலாம் என்றார் இறைவனை உணர்ந்தவர்.

சீடன் அறிவு நிலையைப் பெறுவதற்கு அறிவு உலகத்தைச் சுற்றி வந்தான். அறிவைப் பெற்றான். திருப்தி அடைந்தான். அன்றும் அவன் கோயிலுக்குச்சென்றது உண்மை. அதன் பிறகு புத்தியை அடைய புத்தி உள்ளவர்களைச் சுற்றி வந்தான். அதை அடையும் முன்பே கடவுளைத் தெரிந்து கொள்ள மனிதன் கற்றுக் கொண்டான். அதன் பிறகு கடவுளைக் கண்டான். தெளிவு என்ற ஞானத்தைப் பெற்றான்.

மேலே சொன்ன கருத்தினால் தெளிவு அடைந்த ஒருவன் ஒரு கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு பிராகாரம் என்கின்ற ஒரு திருச்சுற்றாலயம் எதற்கு இருக்கிறது என்பதை உணர்ந்தான். அறிவு புத்தி ஞானம்...இவைகளைப் பெற எதைச் சுற்றினாலும் சுற்றலாம். எப்பொருளை எத்தனை முறை சுற்றினாலும் அறிவோடு சுற்றினால் அதற்கு ஒரு சிறப்பு உண்டு என்பதை உணருங்கள். கடவுள் கோயில் திருச்சுற்றாலயம். இதனது பெருமையை மனித சமுதாயம் அறிவுடன் அணுகுவது நல்லது. பக்தியோடு கோயிலைச் சுற்றிக் கொண்டிருந்த சீடனுக்கு ஐந்து திருச்சுற்றாலயங்களைக் கொண்ட திருவானைக்காவல், ஏழு பிராகாரங்களைக் கொண்ட திருவரங்கம்.. இவைகளின் பெருமை மிகவும் சிறப்பாகத்தெரிந்தது.

தை மாதம் அறுவடை முடிந்திருந்தது. களத்துமேட்டில் அங்கும் இங்குமாக நெல் மணிகள் சிதறிக்கிடந்தன. பறந்து வந்த சிட்டுக்குருவிகள் ஒரு திக்கிலிருந்து ஒரே மாதிரியாக பறந்து வரவில்லை. பல திசைகளிலிருந்து வந்து அமர்ந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நெல்மணிகளைப் பொறுக்கித் தின்றன. பறவைகள் அப்படித் தின்றதில்கூட ஒரு முறை இல்லை; நெறி இல்லை. நெறி இருந்தாலும் இல்லாவிட்டாலும் நெல்மணிகள் அனைத்தையும் குருவிகள் பசி தீர தின்றன என்பதே உண்மை.

அது போல ஆண்டவனைச் சிந்திக்க முடியாமல் தவிப்பது என்பது உண்மை நிலை இல்லை. விதவிதமாக சிந்திப்பது என்பதே முறை. அதுவே உண்மை. அதுவே ஒழுங்கு ஆகும். இதைப் பின்பற்றிய நான் அறிவிற்காக அறிவோடு ஒரு முறை சுற்றி அறிவு நிலையை எய்தினேன். அறிவோடு ஆண்டவனை வணங்கினேன். அவனும் மகிழ்ந்தான்.

மனிதன் திருப்தி அடைய பணமும் வேண்டும். குணமும் வேண்டும். ஏதாவது ஒன்று மட்டும் இருந்தால் போதாது. அது போல புத்தி உள்ளவனாக திகழ வேண்டும். அறிவு நிலை என்ற முதல் நிலையைப் பெற்று புத்திமான்களைச் சுற்றி வந்து இரண்டாவது நிலையை அடையவேண்டும். அப்பொழுது கடவுளுக்கு என் மீது அதிக விருப்பம் ஏற்பட்டது.

கடவுளின் அதிகமான விருப்பத்தை அருள் என்றும் அதுவே கடவுள் தந்த பொருள் என்றும் அமைதி அடைய முடியும். என் மீது விருப்பம் கொண்ட கடவுளை விருப்பம் வைத்ததற்காக இரண்டாவது முறை சுற்றினேன். இந்த இரண்டு நிலைகளை எய்திய மனிதனுக்கு ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது பக்தி வரும். இந்த விருப்பம் தோன்றும்பொழுது புத்தி தெளிவாக மாறுகிறது. அந்த ஞானத்தைப் பெற்றேன்.

அதை அளித்த கடவுளைச் சுற்றிச் சுற்றி வந்து வணங்கினேன். தெளிவை வணங்குகின்ற இடத்தில் இதுவரை மனிதர்கள் எவரும் இருக்கவில்லை. கடவுள்இருக்கிறான். அவனைச் சுற்றித் திருச்சுற்றாலயங்களே இருக்கின்றன.

— ஓம் ஞானச்சேரி ஞானிகள்.

சித்திரபாரதம்
கதை வடிவம்: செவ்வேள்
படம் M.N.ராஜா
உரோமச முனிவர் தருமர் வாழும் கானகத்திற்கு வருகிறார். அர்ச்சுனன் பாசுபதம் பெற்றது, நிவாத கவச காலகேயர்களை வென்றது, அமராபுரியில் தற்போது இந்திரனுடன் இருப்பது முதலான அனைத்துச் சிறப்புகளையும் முனிவர் விவரிக்கப் பாண்டவர்கள் கேட்டுப் பரவசம் அடைகின்றனர்.
உரோமச முனிவர் வழிகாட்ட பல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிக் காந்தர்ப்பமலைக்கு வந்து தங்குகிறார்கள் பாண்டவர்கள்
ஒரு நாள் நறுமணம் வாய்ந்த பொற்றாமரை மலர் ஒன்று ஆகாயத்திலிருந்து விழ, அம்மலரை வீமனுக்குக் காட்டுகிறாள் துரோபதை
இந்த ஆயிரம் இதழ் பொற்றாமரை மலர் எவ்வுலகிற்கு உரியது? முனிபுங்கவரே கூறியருளும்!
குபேரன் ஆளும் அளகாபுரிக்கு உரியது இவ்வற்புதமான மலர் வீமா!
பாஞ்சாலி உனக்கு விருப்பமான இத்தெய்வீக மலர்களை அளகாபுரி சென்று அள்ளிக் கொண்டு வருவேன். அண்ணாவிடம் கூறினால் தடுப்பார், ஆகவே நான் அவரிடம் கூறாமலே சென்று மலருடன் திரும்ப வருவேன்

காஞ்சனவனம் கதலிவனம் கடந்து செல்லும் வீமன், வழியில் வாலை நீட்டிப் படுத்துறங்கும் ஒரு வயோதிகக் குரங்கைக் காண்கிறான்
ஏ குரங்கே எழுந்து வழி விடு!
வயதான கிழக்குரங்கு என்னால் எப்படி எழ முடியும்? உனக்கு வலிவிருந்தால் நீயே என் வாலைத் தூக்கி இப்பக்கமாக வைத்துப் போ
ஆஹா! உன் வால் என்னால் நகர்த்த முடியாத அளவு அவ்வளவு வலிமை வாய்ந்ததோ?
கதை ஒரு கையில் தாங்கியுள்ள வீமன், மற்றொரு கையால் வாலை நகர்த்த முயல்கிறான்
ஆஹா! என்ன விந்தை இது! ஒரு குரங்கின் வாலுக்கு இவ்வளவு வலிமையா?
இரு கைகளாலும் வாலை அசைக்க முயன்று முடியாமல் வீமன் தளர்ந்து போகிறான்
ஏ குரங்கே யார் நீ? வாயுமைந்தன் வீமன் ஆன எனக்கே உன் வாலை அசைக்க முடியவில்லையே! நீ அந்த இராமதூதன் அனுமார் தானே!
பலமாகச் சிரிக்கும் அந்த வயோதிகக் குரங்கு மானிடனைச் சுமந்து தோள் வருந்திய அந்த அற்பக் குரங்குடனா என்னை ஒப்பிடுவது? என்று சீறுகிறது.
உலகம் காக்க இராமாவதாரம் புரிந்த திருமாலையா நீ மானிடன் என்று இகழ்ந்தாய் உன்னை என்ன செய்கிறேன் பார்!
பொறு வீமா பொறு! இராமதூதனும், உன் சோதரனுமான வாயு மைந்தன் அனுமார் தான் நான்
அண்ணா! லங்காதகனத்தின் போது நீர் கொண்ட விசுவரூபத்தை எனக்குக் காட்டியருள்க
திரிவிக்கிரமன் போல் அனுமார் பேருருவம் கொள்ள வீமனால் அவர் கால்களை மட்டுமே காண முடிகிறது.
அண்ணா! போதும்! போதும்! உம் சோதி மேனியைக் காணக் கண்கள் கூசுகின்றன! உம் பேருருவைச் சுருக்கிக் கொள்க!
பாரதப்போரில் பார்த்தன் தேரில் கொடியாக நின்று நீர் காத்திட வேண்டும் இவ்வரம் தந்தருள்க!
வீமன் வேண்டியவாறே அவ்வரம் தந்தருளி, ஆசி புரிந்து செல்லும் வழி கூறி அனுப்புகின்றார் ஆஞ்சநேயர்

மாயை மறைந்தது

டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம்
முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர்
ஞானமணிப் பண்ணை, வெள்ளக்கிணறு,
கோயமுத்தூர்-29.

சமைக்கப்படுவது சமயம். சமைத்தல் என்றால் பக்குவப்படுத்தல்என்பது பொருள். உணவு செரிப்பதற்கேற்பச் சமைக்கப்பட்டுப் பக்குவப்படுத்தி உண்டாலே வாழலாம். ஆகவே சமயம் மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும். சமயச் சான்றோர்கள் விலங்காய்ப் பிறந்த மனிதனை மனிதனாக வாழ்வதற்குப் பக்குவப்படுத்தவே சமய நெறிகளைத் தோற்றுவித்தனர். விலங்குகள் ஒன்றையொன்று கொன்றோ அல்லது விரட்டியோ உண்டு உயிர் வாழும். பகுத்தறிவு படைத்த மனிதனும் அப்படியா? உயர்ந்த மனிதப் பிறவிகிடைத்திருப்பதால் அவனுக்கே கிடைத்துள்ள தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி ஒருவரை ஒருவர் கொன்று கொள்ளாமல், சுரண்டாமல், எல்லோரையும் சமமாகப் பாவித்து உடன் பிறப்புக்களாய் எண்ணி இறைவனின் குழந்தைகள் எனப் பாவித்து ஒருவருக்கொருவர் அன்பாய் வாழ்வதற்கு வழி கற்பிப்பதே சமயம் ஆகும். மனிதரை மட்டுமா? உயிர்களனைத்தையும் உடன் பிறப்புக்களாக எண்ண வேண்டும். ''அனைத்துயிர் ஒன்றென்று எண்ணி அரும்பசி அனைவருக்கும் ஆற்ற வேண்டும்''. ஆகவே மனத்தை அறிவு கொண்டு நெறிப்படுத்தி அவ்வழியில் செலுத்தல் வேண்டும். இவ்வாறு அமைதல், தக்க பயிற்சி இன்றி, அமையாது. இயலாது. எனவே ஒவ்வொருவரும் இப்பயிற்சி பெற்றுத் தம்மைத் தாமே செம்மைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அப்போதுதான் முழுச் சமுதாயமும் திருந்தும். முழுச்சமுதாயமும் பக்குவப்படுத்தப்பட்டு விட்டால் அதே வான் உலகம்-வானோர் உலகம்-தேவருலகம்-சிவபுரம் ஆகிவிடும். இவ்வுலகமே நரகமும் வீடுமாகப் பக்குவத்திற்கேற்ப அமைகிறது. உலகம் வேறு, இறைவன் வேறு உல்ல. உலகம் சிவசக்தி வடிவம். பொறிகளால் நுகரப்படும்போது உலகமாயும், ஞானக்கண்ணால் காணும்போது கடவுளாயும் இந்த உலகம் அமையும் என்பர். இறைவன் இவ்வுலகில்''புன்மையரை உயர்த்தி விண்ணோரைப் பணித்து'' ''நாடகம்'' செய்கிறார். மண்ணுலகில் இருக்கும் ஞானியர் விண்ணுலகத்தவரைக் காட்டிலும் மேலானவர் என்கிறார் மாணிக்க வாசகர். (திருச்சதகம் 5-1-10). இந்தப் பார்வையை - அருள் பார்வையை அனைவர் பாலும் தோற்றுவிப்பதற்கே சமயங்கள் முயல்கின்றன. அப்பார்வை-ஞானப் பார்வை-கிடைத்துவிடின் போரேது? சண்டையேது? பேதமேது? உலகமே ஒன்றாய்விடாதா? நாடு ஒருமைப்பட்டன்றோ காணப்படும்! அத்வைதம் என்பது என்ன? ஒன்றாகக்காணும் காட்சிதானே!

உழவன் உழுதுழுது பண்படுத்தி விதைத்தாலும், தன்னால் விதைக்கப்படாத களைகள் முளைப்பதைத் தடுக்க முடிவதில்லை. அதே போல், சமுதாயத்தைச் சொல்லாலும் செயலாலும் பண்படுத்தினாலும், தீமைகள் தோன்றாமல் இல்லை. நன்மைகளும் தீமைகளும் கலந்தே உலகத்தில் உள்ளன. அவைகளும் மாறி மாறித் திரும்பத் திரும்பக் களைகளாக முளைத்த வண்ணம் உள்ளன. நல்ல செடிகள் விதைத்தாலன்றி தாமே முளைப்பது அருமை. ஆனால் களைகள் அப்படி அல்ல. விதைக்காவிட்டாலும் களைகள் மாறி மாறி முளைத்துக் கொண்டே உள்ளன. இவ்வாறு மாறி மாறித் தாமே தோன்றும் களைகளைப் போல தீமைகள் தோன்றி மறைந்து, தோன்றி மறைந்து, தோன்றிச் சுழன்றுகொண்டுள்ளன. சமுதாயத்தில் தீயவையும் இப்படியே. இவ்வாறு மாறி மாறி மயக்கம் தந்து கொண்டிருப்பதையே ''மாயை'' எனச் சமய அறிஞர்கள் கலைச்சொல் (**Technical Word**) தந்து பேசுகின்றனர். அதனாலேயே உலகம் மாயை-பிரபஞ்சம் மாயை-என எழுதுகின்றனர். இந்த உலகம் இடையறாது இயங்கி வருவதால்தான் இதனை இயற்கை என்கிறோம். இயற்கை முழுவதும் இறைவனின் இன்னிசைக் கருவியாம். இந்த இயற்கையே மாயை எனவும் ஆகிறது. இந்த மாயை-இந்தக்களைகள்- பிடுங்கப்பட வேண்டும் அல்லது அவை தோன்றாதவாறு பண்படுத்துவதற்கு வழிகாணல் வேண்டும். கண்டறிந்த வழிகளே சமயவாதிகள் கூறும் வழிகளாகும். அவ்வழிகளை ஒவ்வொருவரும் பின்பற்றியாதல் வேண்டும். இல்லையாயின் ஒரு காட்டில் தோன்றும் களை இன்னொரு காட்டிற்குத் தாவிப் பரவுதல் போல தீமையும் பரவும். கெடுக்கும். பார்த்தீனியன் நச்சுச் செடி அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் தாவி, எவரும் அஞ்சும் வண்ணம், பரவிவிடவில்லையா? ஆகவே ஒவ்வொருவரும் தீமையை அழிக்க அல்லது தடுக்க வில்லையானால் அதுபரவி சமுதாயத்தைக் கெடுக்கும். போதைப் பொருட்கள் பரவிக் கெடுப்பதைத் தடுக்க வேண்டாமா? எனவேதான் சமயவாதிகள் மனப்பயிற்சியை - மனப்பக்குவத்தை ஒவ்வொருவரும் கொள்ளவேண்டும் எனக்கூறுவதோடு தீயவர் உறவிலிருந்து விலக வேண்டும் என்பதையும் வற்புறுத்துகின்றனர். தீமையின் தாக்கத்தை நன்மை தாங்கி வெல்ல வேண்டுமல்லவா? தான் பட்ட துன்பங்களையும் இடையூறுகளையும் துடித்துத் துடித்து மாணிக்க வாசகர் தம் பாடல்களில் கூறியிருப்பவை அவருக்கு ஏற்பட்டவை மட்டும் அல்ல. பொதுவாக மக்கள் எல்லோருக்கும் ஏற்

படும் இழிநிலைகளையே தம் மேல் ஏற்றிஎல்லா உயிர்களும் உய்வதற்காகவே தீமைகளை — மாயைத் தன்மைகளை-எடுத்துக் காட்டி உருகியுள்ளார் அப்படியானால் மாயையை வெல்வது எப்படி? மாயையைத் தடுப்பது எப்படி. போரிடுவதைவிட அதைப் பயந்து ஓடும்படி செய்வது சிறந்ததல்லவா?

தடுப்பூசிகள் போட்டுக் கொள்வது நோயை வெல்வதற்கன்று. வென்று அந் நோயைப் பிடித்து நாம் என்ன செய்யப்போகிறோம். ஆகவே வெல்வது என்பது அவற்றைப் பிடிப்பதற்கன்று. அங்கு **தீமைகள் வராமல் தடுப்பதே வெல்வதாகும்.** தீமைகட்கு - கிருமிகளுக்கு- நோய் நுண்ணுயிரிகளுக்கு-எதிரான வலுவுடைச் சத்துக்கள் (**Immunity**) உடலில் அமைந்தால் நோய்-தீமை-எபபடி உடலைப் பற்றும்? பற்ற முடியும்? அவ் வலுச்சத்துக்களைக் கண்ட கிருமிகள்-நோய்கள்-தீமைகள் அஞ்சி பற்றாமல் ஓடும். அதனால் பெறுவது வளமான உடல். வளமான வாழ்வு. நோய்கள் தொற்றாமல் தடுக்கப் பலவகையான தடுப்பூசிகள் போட்டுக் தடைக்காப்புச் செய்வது போலசமையத்தலைவர்கள் தடைக்காப்புச் செய்ய எனன ஊசி மருந்துகளைத் தருகின்றனர்? மனநலம் கெடாமல் இருக்க மனத்தில் தைக்க வேண்டியவை உள. அவை தைத்துவிடின் இந்த உலகம் கவலையற்ற இன்ப உலகமாக அமைந்து வான் உலகமாக மாறிவிடும். அதற்கு அழைத்துச் செல்ல வழி காட்டிய அந்நிலையிலேயே தம் வாழ்வை அமைத்துக் கொண்ட மாணிக்க வாசகர், மாயையோடு போராடித் தடுத்து ஓடச் செய்வதற்கு காட்டும் நெறிகளில் ஒன்றிரண்டை இக்கட்டுரை காட்ட முயல்கிறது.

மாயையை வாராமல் தடுத்தாக வேண்டும். அதற்கு நம் பார்வையை மாற்றியாக வேண்டும். எனவே ''திருப்படை எழுச்சி'' என்னும் தலைப்பில் இரண்டு பாடல்களில் மாயையை வெல்ல - வாராமல் தடுக்க-வழிகள் காட்டுகிறார். அதற்குத் தக்க படை தேவை. படை என்பதற்குத் தமிழ் அகராதியில் பத்தொன்பது பொருள்கள் கூறப்பட்டுள்ளன. மேலும், ஆற்றுப்படை, ஆறுபடைவீடுகள், நாற்படை, அறுபடைகள் (மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை), படைத்தல் போன்ற சொல் பயிற்சியையும் நாமறிவோம். இவற்றை நோக்கின் படை என்பது தலைவன் படைத்து ஆக்கிக் கொண்டு வழிப்படுத்தும் திரள் அல்லது குழு எனப் பொருள் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது.

இருவர்க்குள் முரண் ஏற்படின் அல்லது ஒருவரை ஒருவர் யார் விஞ்சியவர் எனக் காண எண்ணின் அல்லது ஒருவர் நாட்டை ஒருவர் பிடித்துக் கொள்ள விரும்பின் அல்லது ஒருவர் ஒருவரை எப்போதும் சுரண்டியோ அச்சுறுத்தி கொண்டோ இருப்பின் போர்நிகழ்வது இயல்பு. இரு பக்கங்களிலும் அவரவர்க்கு நம்பிக்கையானவர்கள் கருவி கரணங்களுடன் படை எடுப்பது மரபு. படைகள் அணிவகுக்கப்பட்டுச் சீராகச் செல்லவேண்டும். படையை நெறிப்படுத்துபவன் யார் யார் எங்கெங்கு அமைய வேண்டும் என நிறுத்துவான். படைத் தலைவனையும், படைகளின் பேரணிகளையும், கருவிகரணங்களையும்படைகளின் ஆரவாரத்தையும் படைப் பெருக்கத்தையும்கேட்டால் அல்லது கண்டால் எதிரி போருக்கே வராமல் ஓடி ஒடுங்கி விடவும் கூடும். போருக்கு வரினும் தோற்றுவிடக் கூடும் எனப் பயப்பட்டு எதிரி அடங்கி விடவும் கூடும். இது இயற்கை. மிக்க ஆற்றலும் பின்புலமும் கொண்ட ஒருவனிடம் அவை இல்லாதான் அஞ்சி அடங்கி ஒடுங்கி அகன்று விடுவான். படைவலியுடையான் தடை அகன்றதும் எளிதில் எண்ணிய இடத்தை அடைதல் மிக எளிமை, இவைகளை மனதில் பதித்துக் கொண்டு பின் வரும் பாடலைப் படியுங்கள் :

''ஞான வாள் ஏந்தும் ஐயர் நாதப்
பறையறைமின்!
மான மா ஏறும் ஐயர் மதிவெண்குடை
கவிமின்!
ஆனந்த நீற்றுக் கவசம் அடையப்
புகுமினகள்!
வான ஊர் கொள்வோம் **மாயப்படை வாராமே''**

மாயப்படையுடன் போரிட வேண்டும். ஏன் படையை **வாராமல் தடுக்க** முடியாதா? முடியும். மாயப்படையுடன் போரிடாமல் அதைத் தடுப்பதே மணிவாசகரின் குறியாம். மாயப் படையை வெல்லுவது நோக்கமன்று. மாயப் படையை அஞ்சி ஒடுங்கச் செய்ய வேண்டும். ஒடுக்கிவிட வேண்டும். அடக்கிவிட வேண்டும். முளைப்புத் தன்மை கொண்ட விதையை வறுத்து அதன்பின் விதைத்தால் முளைக்குமா? முளைக்காது. அதன் முளைப்பின் முனைப்பு அவிக்கப்பட்டுவிட்டது. விதை உண்டு. ஆனால் முளைத்திறன் இல்லை. அதைப் போல மாயை தன் ஆற்றலை, முனைப்புக்களை, தன் செயல்களை ஒடுக்கிக் கொண்டு அடங்கிவிடவேண்டும். படை எடுப்பில்சிவனடியார்களின் நோக்கமாக மாணிக்க வாசகர் காட்ட விரும்புவது அவ்வளவே. அப்படியாயின் அவைகளைக் கொல்ல வேண்டியதில்லை. அழிக்க வேண்டியதில்லை. உயிரிழப்பு ஏதும் இந்தப் போர் நோக்கில் இல்லை. சிவனடியார் எவ்வுயிரையாவது கொல்வாரா? கொல்லாமை அவர் குறியாயிற்றே. ஆகவே மாயப்படையை அழிக்காமல் ஆனால் வராமல் தடுப்பது எப்படி? படைத் தலைவனின் தோற்றம், படைகளின் தோற்றம், அவர்களின் ஆற்றல்கள், கருவிகள், துணைகள் தம் வலிமை, எழுச்சி, ஆகியவற்றை மிகப் பலமாகக் காட்டினால் எதிரியும் எதிரிப் படையும் அஞ்சி ஒடுங்கிஓடி அடங்கும்.

உலகத்தை அழித்துவிடக் கூடிய அணுகுண்டு போன்ற வலிமையை ஒருவர் கொண்டிருப்பாரானால் யார் அவருடன் போரிட முன் வருவர்? அவன் போரிட வருவானாயின் அவனிடம் அடைக்கலமன்றோ புகுவர். அடங்கி ஒடுங்கி அகன்று விடமாட்டாரா? மாயையும் அந்நெறிக்கு விதிவிலக்கு அன்று. ஆகவே மாயை அஞ்சுமாறு தம் படையை அமைக்கத்

தம்படை எழுச்சியை ஆயத்தப் படுத்தி நிறுத்தி, மாயப்படை வாராமல் அஞ்சி அடங்கி ஒடுங்கி அகலுமாறு தம்முடையபடை அணி வகுப்பை நிறுத்திக் காட்டுகிறார்.

சிவனடியார்கள் போருக்குப் புறப்படும் போது பக்கபலமாகப் படைகள் நிறுத்தப்படுகின்றன. மாணிக்கவாசகரின் பாடலைப் பாருகள்.

''தொண்டர்கள் தூசி செல்லீர்! பக்தர்காள்
சூழப் போகீர்!
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்!
திண்டிறல் சித்தர்களேகடைக்கூழை
சென்மின்கள்!
அண்டர் நாடு ஆள்வோம் நாம்
அல்லற்படை வாராமே''.

தொண்டர்கள், ஒண் திறல் யோகிகள், திண் திறல் சித்தர்கள், பக்தர்கள் ஆகிய நால்வகையான படைகள்-சிவ அன்பர்கள்-மாணிக்கவாசகரின்படைகளாய் உதவுகின்றனர்.

கருவிகளைக் கையில் கொண்டு செல்லாமல் வீரர்கள் போருக்குச் செல்லுதல் எங்கேனும் உண்டோ? இல்லையல்லவா? ஞான வீரர்கள் ஞானவாளினை ஏந்தியுள்ளனர். வாள் எனக் கருவி ஒன்றினைச் சொல்லியிருந்தாலும் சிவபெருமானிடம் திரிசூலம் இருப்பது போல திரிசூலம் கொண்டு செல்பவரும் உண்டு எனக் கொள்ள வேண்டும். இவ்வாறு சொள்ள இலக்கணமும் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளும் இடம் தருகின்றன. ஐயராகிய சிவனடியார்கள் ஞானவீரர்களாய் ஞானத்தைடுய-மெய்யுணர்வையே-மெய்யறிவையே **(Wisdom)** கூரிய அறிவையே-வாளாகக் கொண்டுள்ளனர். முக்குண அழித்தலைச்சின்னமாகத் திரிசூலம் கொள்ளலாகிறது. அச்சிவனடியார் படையில் மாணிக்கவாசகரும் ஒருவர். தன்னைத் தனிப்படுத்தித் தலைவனாக்கிக் கூறியிருந்தால் ஆணவப்பிடிப்புத் தோன்றிவிடும். மலங்களை அழித்தவர் என்பதைக் காட்டவே தன்னைத் தனிப்படுத்தி-தலைமைப்படுத்திக் கூறவில்லை. கூறியிருப்பின் செருக்கின் தோற்றம் வெளிப்பட்டுவிடும்.

சிவனடியார்கள் தம் நால்வகைப் படைகளுடன், ஞானம் - மெய்யறிவு-மெய்யுணர்வு கருவிகளுடன், போருக்கு ஆயத்தமாய் விட்டனர். இந்தக் கருவிகள் என்ன செய்யும்? எதிரி மாயை. அம்மாயையில் தோன்றுவது அஞ்ஞானம் - அறியாமை. அஞ்ஞானத்தை, ஞான வாளால் - மெய்யறிவால் - அழித்தால் ஞானம் வாழும். எல்லா உண்மைகளும் துலங்கும். ஒருவன்படும் துன்பங்களுக்கெல்லாம் காரணமே அஞ்ஞானம்தான். அறியாமைதான். அந்த அறியாமையை அகற்றுவதற்கு ஞான வாள் ஒன்றால்தான் ஆகும். அது விலகினால் மெய்ஞ்ஞானம்-உண்மை அறிவு- மெய்யுணர்வு தோன்றும். அந்த மெய்யுணர்வு வளர்க்கப்பட

வேண்டும். அதனை வளர்ப்பதற்கு முதற்படி, நிறைவானபடி, இறைவன் பெயரை முழங்குதலே. நாதப்பறை அறைதலே. ஆகவே அப்படைகள் நாதப் பறையை முழக்கிச் செல்கின்றன.. நாத முரசுகள் ஏன் முழங்க வேண்டும்? இறைவனுக்கு நாதமே பறை என மாணிக்கவாசகரின் கீர்த்தித் திருவகவல் நூற்றி எட்டாவது வரியும் திருத்தசாங்கம் எட்டாவதுபாட்டும் கூறுவதைக் கற்போர் இணைத்து பார்த்துச் சுவைக்கலாம். ஓங்காரத் தத்துவமே சிவனாரின் முரசு. அதற்குப் புறச்சின்னமே உடுக்கை. முரசுபறை முழங்க சிவவீரர்கள் ஞானவாளுடன் அணி அணியாகப் புறப்பட்டு விட்டனர். அவர்கள் வாய்தொறும் நடைப்பாட்டுத் தோன்றி உயிர்ப்பும்எழுச்சியும் ஊட்டி உற்சாகம் தரவேண்டுமல்லவா? எனவே ஒவ்வொரு வீரர் வாயும் 'ஓம் நமசிவாய' முழக்கத்தை ஒவ்வொரு எட்டிலும் எழுப்புகிறது. சிவநாத ஒலி-ஓங்கார ஒலி-ஓங்கார ஐந்தெழுத்து முழக்கம் வீரர்களுக்குத் தெம்பும் கிளர்ச்சியும் ஊக்கமும் ஏற்படுத்துகின்றது. ஓம் என்னும் ஓசையின் வடிவினனாகிய இறைவனின் திவ்விய உடல் அலகிலா ஜோதி பேரின்பம், சித் அம்பரம் ஆம். ஓங்காரம் என்று சொல்லுவதும் பிரணவம் என்று சொல்லுவதும் ஒன்றே. அகர, உகர, மகரமாகிய மூன்று எழுத்துக்களின் ஒன்றித்த ஒலி இது. அகரம் உலகின் தோற்றத்துக்கும், உகரம் உலகின் இருப்புக்கும், மகரம் உலகின் ஒடுக்கத்துக்கும் உரிய ஓசைகளாம். ஆகவே ஓம்என்று ஒரு தடவை இறைவன் கூறும்போது அண்டத்தின் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகியவை நிகழ்கின்றன. இயற்கையில் இடையறாது ஓம் என்னும் ஓசைஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அவ்ஓங்காரஒலியை சிவனடியார்களும் எழுப்பி நடைபோடுகின்றனர். மாணிக்கவாசகரின் முதற் சொல்லே 'நமசிவாய' என்பது தான். சிவபுராணத்தின் தொடக்கமே அச்சொல் தொடர் ''நமசிவாயவாழ்க. நாதன் தாள் வாழ்க'' என்பதே முதலடி. நாதத்தின் தலைவன் நாதன். ஆக நாதப்பறை முழக்க வேண்டியது தானே! படைகள், நாதனின், சிவனின்பல பெயர்களையும் கூவிநாதம் கிளப்புகின்றன. 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திரு நாமம்' பாடிச் செல்கின்றன. ஒவ்வொரு பெயரின் பொருளுணர்ந்து ஆயிரம் திருப்பெயர்களை ஓதுவது நல்ல அர்ச்சனையும், ஆராதனையும், உபாசனையும் ஆகுமல்லவா?

பெருமை பொருந்திய காளையை ஊர்ந்து செல்லும் வீரர்களின் மதி வெண் குடையாகக் கவிந்துள்ளது. காளை சிவனுக்குரிய ஊர்தி காளை என்பது உயிர், உயிரை வாகனமாகக் கொண்டு இறைவன் அமைகிறான். இந்த மெய்யுணர்விலிருந்து வீரம் பிறக்கும். விடைப்பாகனல்லவா? காளையின் மீது அமர்ந்திருப்பது உயிர்கள் அனைத்திலும் அவன் ஆரோகணம் செய்வதற்கு அறிகுறியாம். எனவே போர் வீரர்கள் அவ்வூர்தியைப்பயன் படுத்துகின்றனர். அவர்களுக்கு அமையும் அறிவே-மதியே-நுண்ணறிவே வெண்குடையாக ஊர்திமேல் அமர்வாருக்கு அமைகிறது. மதிசூடியவன் சிவனல்லவா? சிவன் நிலவினை தலையில் வைத்திருப்பது நினைவில் வந்தமையும். இந்த நுண்ணறிவு-மூன்றாம் பிறை- மதி எதிரியை அகற்றுவதற்காக ஒளி வீசி நல்வழியைக் காட்டித்தரும். அது வெண்குடை நிழலுக்கு நிகராம். வீரர்கள் சிவக்கோலம் பூண்டு நடைபோடுகின்றனர்.

ஞானவீரர்கள்நன்மை தரும் திருநீற்றுக் கவசம் அல்லது போர்வை அணிந்துள்ளனர் வீரக்கவசம் பசுவின் சாணத்தின் சாம்பலாகிய திருநீறே ஆம். சிவன் திருநீறு பூசியிருப்பதை முன்னிட்டு அவரை ''நீற்றோன் காண்க'' என்கிறார் மணிவாசகர். எல்லாம் தீயில் வெந்து போன பிறகு எவ்வளவுதான் எரித்தாலும் எது வேகாதிருக்கிறதோ அதுநீறு. உலகெலாம் இறுதியில் அழிந்து போன போதிலும் அழியாதிருப்பவன் சிவன். உடலோ அழியும் தன்மையுடையது. உடல் சுகத்தை நாடும் மனம், தனக்குக் கேடு சூழ்ந்து கொள்கிறது. தியாகத்தின் சின்னம் திருநீறு. ஆதலால் அதைத் தியாகராசன் அணிந்திருக்கிறார். உடல் உணர்வை வெல்ல வேண்டும். உடலைச் சாம்பல் போன்று வைத்திருத்தல் நல்லது. அதன் மூலம் அற்ப சுகத்தை நாடாதிருப்பது ஆத்மசுத்தியாம். பண்டங்களெல்லாம் தீயில்வெந்து அழிந்து போன பிறகுநீற்றிருப்பதுநீறு. அதை மீண்டும் எவ்வளவு சுட்டாலும் அதன் தன்மை மாறாது. ஆக அது மெய்ப்பொருளாகிய சிவனதுசின்னமாம்.

இயற்கை இறைவனின் உண்மை வடிவம். அவரை ஒரு மனிதனாகச் சமைத்து நீறு பூசுவித்து, புலித் தோலுடுத்தி, பாம்பு அணிவித்து, மறை ஓதப்பண்ணுவித்து-இன்ன பிற செய்துள்ளமை, மனிதனது கற்பனையாம். ஆயினும் இதன் மூலம் உண்மைகள்-தத்துவங்கள் மிளிர்கின்றன. மாறும் தன்மையுடையதாய் இருப்பது உலகம். அழியாத் தன்மையாயிருப்பது இறைவன். உலகப் பொருள் ஒன்றில் அழியும் பகுதி தகனம்-நெருப்பிலிட்டு எரிப்பதுஆகிறது. அழியாப் பகுதி சாம்பலாய் எஞ்சி நிற்கிறது. பிறகு முன்பு சொன்னது போல எவ்வளவு சுட்டாலும் பழைய சாம்பலாவே இருக்கும். எனவே சாம்பல் இறைவனின் சின்னம். ஆகவே அழியும் தன்மையுடைய உலகிற்கு ஆதாரமாக அழியாப்பொருள்ஒன்று உண்டு என்னும் உண்மையை விளக்குகிறசின்னம திருநீறு. இது வைராக்கியத்தின் சின்னமுமாம். வைராக்கியம் என்பதன் பொருள் உலகப்பற்றை ஒழித்தல் என்பதாம். இது சுட்டறுத்தல் எனவும்படும். (ராகம்-உலகின் கண் பற்று வைத்தல். வைராக்கியம் அதன் எதிர்மறை). பற்றை அழித்தலே அறியாமைப் பகையை ஒடுக்குதற்குரிய வழி. அறியாமையை அழித்தவர் - சம்மாரம் செய்தவர் - சுட்டறுத்தவர் சிதம்பரம் புகுவர். இவ்வளவு பெருமை உடைய திருநீற்றைப் படையினர் கவசமாய் அணிந்துள்ளனர். சிவனின் நீற்றைப் பூசியுள்ளனர் என்பதே மேற் பொருளாம். சிவவடிவமாக மெய்யடியார்கள் மாறி நிற்கின்றனர்.

வான ஊர், அண்டர் நாடு, கொள்வதும் வெல்வதும் என்பவை எப்படி? வான ஊரும் அண்டர் நாடும் எங்கேயோ இருக்கின்றன என எண்ணவேண்டாம். இனிய தூய மனமுடையார்க்கு இந்நிலவுலகே மலமற்ற இறைவனாக மிளிர்கிறது. இறைவன்வேறு இயற்கை வேறு அல்ல. காண்போனின் தகைமைக்கு ஏற்ப அது இறைவனாகவோ இயற்கையாகவோ காட்சி தருகிறது. ''நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி'' எனச் சிவபுராணம் பேசும். இயற்கை இறைவனின் உண்மை வடிவமாயிற்று. ''ஈசன் அவன் எவ் உயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ'' எனக் கூறும் திருச்சாழல்.. ஆக ஞானக்கண்ணுக்கு இயற்கை இறைவன். ஊனக்கண்ணுக்கு அது மாயை. எனவே வான ஊர் அண்டர் நாடு, சிவபுரம், சிதம்பரம் எல்லாம் ஒரே பொருள் ஒரே இடமாகும்.

ஞானத் தலைவனுடன் தூசிப் படை--முன்படையாகத் தொண்டர் படையும், பக்கப் படைகளாகப் பக்தர் படையும், இடையில் பேரணியாக பேரணிப் படையும், கடைக் கூழை-இறுதிப்படை யாக-தாங்கும் படை யாகச் சித்தர்படையும் நிற்கின்றன. தன் பக்கம், பல மாக இருக்கத், தன் கருத்தொத்தவர்களையே சேர்த்துக் கொள்ள வேண்டும். நட்புக் கொள்ள வேண்டும். சேரிடமறிந்து சேர வேண்டும். நல்லாரிணக்கம் -சிவனடியார் நட்பு-சத்சங்கம் ஒருவனுக்கு இடர் தராது-வெற்றியே நல்கும். பேரணி கண்டு, கட்சிகளின் வலுவை இக் காலம் உணர்வது போல, ''பேரணிகள்'' செல்வதாக மாணிக்கவாசர் கூறுவது இதன் பெருமையை உணர்த்தும்.

''இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்'' என்பது போலப் படையைக்கண்ட அல்லது கேட்டறிந்த மாயை போரிட வருமா? சிவஅடியில் சிவனடியார்கள் திரண்டு நிற்பதை அறிந்த மாயை - அறியாமை -போருக்கு வாராமல் ஓடிவிடும். வான ஊருக்குள்ள தடை—மாயை நீங்கும். அல்லல் அகலும். சிவனடியார்கள் எத்தடையுமின்றி நேராகச் சிவபுரம் அடையலாம்.-அண்டர் நாட்டில் சுதந்திரமாய் வாழலாம். சிதாகாசமாகிய சுயராஜ்யம் கிடைத்துவிடும். மாயை - காமம், வெகுளி, மயக்க நோய்கள் - அடங்கி ஒடுங்க சிவனடியார் இங்கேயே ஞானக்கண்ணால் இறைவனை நேரில் கண்டு மகிழலாம். தடைச்சுவர் தகர்ந்தது. தலைவன் தலைவனாய் என்றும் உள்ளவனாகிறான்.

சிவபுரம் சென்ற சிவக் கூட்டம் சிவனைக் காண வேண்டாமா? சிவனைக் கண்டு என்ன செய்வது? திருக்கழுக்குன்றப் பதிகத்தில் மாணிக்கவாசகர் காண் ஒணாத் திருக்கோலம் காட்டியதையும் அவர் பெற்றதையம் கூறும் பாடலைப் பாடி நாமும் அடைக்கலம் புகுவோம்.

''பேதம் இல்லது ஓர் கற்பு அளித்த
பெருந்துறைப் பெருவெள்ளமே
ஏதமே பலபேச நீ எனை
எதிலார் முனம் என்செய்தாய்

சாதல் சாதல் பொல்லாமை அற்ற
தனிச்சரண் சரண் ஆம் எனக்
காதலால் உனை ஓத நீவந்து
காட்டினாய் திருக்கழுக்குன்றிலே''

காதலால் ஓதிக் கண்ணீர் மல்கி திருக்கழுக் குன்றில் காண் ஒணாத் திருக்கோலம் கண்டு அடைக்கலம் புகுந்து நாம் உய்ய சிவப்படையுடன் சேர்ந்து சிவபுரத்தில் வாழ்வோமாக. இவ்வுலகமே சிவபுரம் என்பதை உணர்ந்து மனதில் மாசு அகற்றி மனக் கவலைகளை ஒடுக்கி உறுதிப்படுத்துவோமாக. திருவடியே சிந்தித்து திருவருளால் திளைப்போமாக. மாயை மாயமாக மருண்டு மறைந்தது.

வாசகர் எண்ணங்கள்

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் **திருமந்திரச் செம்மல் திருமிகு டி. வி. வே.** அவர்களது ''அருளாளர்கள் அனுபவம்'' கட்டுரை பொருள் பொதித்த ஞானவுரை. அது மட்டுமன்று, இறையன்பில் திளைத்த அன்பர் அருளுரை. அவர்தம் பொருட் பொழிவைத் தொடர்ந்து ''திருக்கோயில்'' இதழில்வெளியிட்டுப் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் படித்துப் பயன்பெறச் செய்திட வேண்டுகிறேன்.

—பேராசிரியர்
மு. சுந்தரேசம் பிள்ளை.
தத்துவமையம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

() () () ()

சிவபெருமானின் ''அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்'' என்ற தலைப்பில், இந்து சமய அறநிலையங்களின் ஆணையாளர் ஆற்றல் பெருந்தகை, அண்ணலார் திருநறை சுகவனேஸ்வர் ஐ. ஏ. எஸ். அவர்கள் அம்மையப்ப தெய்வாம்ச அருளாளுகையை அங்கையின் நெல்லியென அழகுபட நாம் உணர்ந்து போற்றும் வண்ணம் எழுதி அருளியுள்ளார்கள்.

— உமாதேவி ஐயப்பன்,
பெண்ணாடம்.

() () () ()

திருக்கோயில் திங்கள் இதழ்
தவறாமல் படித்த
தவநெறி வீடுபேறு
திண்ணமாய் பெறுவோமே.

— திலகம் ஈஸ்வரன்,
திருமீயச்சூர்.

தமிழ்நாடு திருக்கோவில்கள் நிர்வாக வாரியம்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாக அமைப்பினை மாற்றி அமைத்து அதன் மூலம் திருக்கோயில்களின் பராமரிப்பு, நிர்வாகம், வழிபாடு மற்றும் மத சம்பந்தமான விழாக்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்காக திருத்தி அமைக்கப்பட்ட அறநிலையத் துறைசட்டம் 1991 (சட்டம் 46[1991) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்டம் 13-12-91 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்படி தமிழ்நாடு திருக்கோவில்கள் நிர்வாக வாரியம் மாநில அளவில் இயங்கும். மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்கள் அமைக்கவும் இதன்மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் இந்த வாரியத்தின் தலைவராகச் செயல்படுவார்கள்.

திருக்கோவில்கள் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் உள்ளடங்கிய ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் உடைய திருக்கோயில்களின் அறங்காவலர்கள் நியமனம் செய்யும் அதிகாரம் மாநில அளவிலான வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு வருவாய் 1 லட்சத்திற்கு கீழ் உள்ள திருக்கோவில்களின் அறங்காவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மாவட்ட குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களைதலைவராகக் கொண்ட இந்த தமிழ்நாடு திருக்கோவில்கள் நிர்வாக வாரியத்தின் அலுவல் சார்புடைய உறுப்பினர்கள் 9 பேரும்

அலுவலர் சார்பில்லாத உறுப்பினர்கள் 9 பேரும் இருப்பார்கள். அலுவல் சார்பில்லாத அமைப்பில் ஓர் உறுப்பினர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் மாநில அளவிலான திருக்கோவில்கள் நிர்வாக வாரியத்தின் செயலாளராக செயல்படுவார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் இதுவரை செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்கள்தவிர மற்றவைகளைத்திருக்கோயில் நிர்வாக வாரியம் மற்றும் மாவட்ட குழுக்களும் செயல்படுத்தும்.

13-12-91 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள சட்டத்தின்படி மாநில அளவிலான திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1. மாண்புமிகு முதல்- அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைவர் (பதவி வழி)
2. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திருமிகு கே.ஏ. செங்கோட்டையன். உறுப்பினர்.
3. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமிகு எம்.ஆனந்தன். உறுப்பினர்
4. இந்து சமய அறநிலையத்துறை அரசுச் செயலாளர், உறுப்பினர் (பதவி வழி)
5. ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை. செயலாளர். (பதவி வழி)
6. திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்
7. திருமிகு வருவாய்த்துறை அரசுச் செயலாளர் அவர்கள்.
8. திருமிகு தலைமைப்பொறியாளர் அவர்கள் (கட்டிடங்கள்) சென்னை.
9. திருமிகு இயக்குநர் அவர்கள், தொல்பொருள் ஆய்வுத்துறை-சென்னை.

அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள்

10. தவத்திரு காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதினம்.
11. திருமிகு டி. எஸ். சந்தானம், தலைவர் சுந்தரம் நிதி நிறுவனம்.
12. திருமிகு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள்
13. திருமிகு எம்.ஏ.எம். ராமசாமி அவர்கள்
14. திருமிகு அல்லூர் விஸ்வநாத சிவாச்சாரியார், அல்லூர், திருச்சி.
15. திருமிகு கே. பராசரன், இந்திய அரசின் முன்னாள் சட்ட ஆலோசகர்
16. தவத்திரு வானமாமலை இராமானுஜ ஜீயர் நாங்குநேரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
17. திருமிகு அக்னிகோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரியார்.
18. திருமதி ராணி டி. இந்திரா தேவி, இராமநாதபுரம்.

இந்த தமிழ்நாடு திருக்கோவில்கள் நிர்வாக வாரியம் 13-12-91 முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

மாவட்ட குழுக்கள் ஓர் தலைவரையும் 11 உறுப்பினர்களையும் கொண்டதாக அமையும். மாவட்டக் குழுக்கள் மற்றும் அதன் தலைவர்கள் ஆகியோரை இந்தத் தமிழ்நாடு திருக்கோவில்கள் நிர்வாக வாரியம் நியமனம் செய்யும். இதில் ஓர் உறுப்பினர், தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார். இந்த மாவட்ட குழுக்களின் செயலாளராக துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் செயல்படுவார். மாவட்டக் குழு, ஆண்டு வருவாய் ரூ. ஒரு லட்சத்திற்கும் கீழ் உள்ள திருக்கோவில்களில் பரம்பரை சாரா அறங்காவலர்களை நியமனம் செய்யும்.

மாவட்டக் குழு இதுவரை துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்தும்.

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம்

செந்தமிழ்ச் செல்வமணி **கோ. சண்முகம்**, பி.காம்.

(1)

திருத்தொண்டர்கள் யார்? அவர்களின் பணி என்ன? அவர்களின் இலட்சியம் என்ன? அவர்களின் மனோபாவம் என்ன? என்பதைத் தெளிந்து சுவையாக பக்திச் சுவை சொட்ட சொட்ட முதன் முதலில் திருத்தொண்டர் புராணமாக நமக்கு வழங்கியவர் தெய்வச் சேக்கிழார் பெருமான் ஆவார்.

பல்வேறு நாடுகளுக்குச் சொந்தக்காரர்கள். பல்வேறு திசைகளில் பல்வேறு காலங்களில், பல்வேறு ஊர்களில், பல்வேறு தொழில்களைச் செய்து வாழ்ந்த புனிதர் பற்றி இம்மாக்கதையில் பேசப்படுகின்றன. காலத்தால், இடத்தால் தொழிலால், மரபால் ஒருவருக்கொருவர் தொடர்பில்லையன்றாலும் திருத்தொண்டர்களிடம் காணப்படும் 'இறை அன்பு' எனும் கயிறு இவர்களைப் பிணைத்து ஒருமைப்பாட்டு உணர்வினுக்கு சிறந்த எடுத்துக் காட்டாக இத் திருத்தொண்டர்கள் விளங்குகின்றார்கள்.

இச்சிறப்பு மிகுந்த திருத்தொண்டர்களின் புராணத்தைப் பாடவேண்டும் என்று சேக்கிழார் முடிவு செய்தவுடன் உடனடியாக அவர் பாடிடவில்லை. தில்லை திருத்தலம் சென்று ஆடல்வல்லானைப் பாடிப் பரவி திருத்தொண்டர் புராணம்பாட நினதருள் வேண்டுமென முறையிட்டார். சேக்கிழாரின் பக்குவம் உணர்ந்து ஆண்டவனே ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுக்க அதனையே முதலாக வைத்து,

''உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்''

என்று திருத்தொண்டர் புராணத்தைப் பாடத் தொடங்குகிறார்.

நிலவுலாவிய நீர்மலிவேணியன் என்று திருமுடியையும், மலர்சிலம்படி என்று திருவடியையும் குறிப்பிட்டு இத்திருமுடியும், திருவடியுங் கொண்ட இறைவனின் திருமேனியோ அலகில் சோதியன் என்று தில்லைக் கூத்தனின் பேரழகினை விவரித்து அதில் மெய்மறந்து பேரின்பத்தில் திளைக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் உணர்வதற்கும், ஓதுவதற்கும் அரியவன், பிறைச்சந்திரன் உலவுவதற்கு இடமாக — கங்கை நீர் நிறைந்த சடையினை உடையவன் ஒப்பற்றஒளியுரு உடையவன். திருத்தில்லையில் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்த திருக்கூத்து ஆடுகின்றவன். எங்கும் நீக்கமின்றி நிறைந்திருக்கும் சிலம்பணிந்த பரம்பொருளின் திருவடிகளை வாழ்த்தி வணக்கம் செய்வோம் என்று தாம் வணங்குவதோடன்றி மாக்கதையாம் இத்திருத்தொண்டர்புராணம் படிப்பவர்களையும் சேக்கிழார் பெருமான் வணங்க வைக்கிறார்.

அப்படி ஆடல்வல்லானின் திருத்தாள்களைத் தொழுதால், ஊனினால் ஆகிய உடம்பு பெற்ற இம்மானிடப் பிறவியானது, தாள் பெற்றதனாலாய உறுதிப் பயனைச் சேரும் என்ற உண்மையை நமக்குத் தெளிவாக உணர்த்துகிறார். உயிர்களை பிறவிக் குழியிலிருந்து எடுக்கும்தன்மையுடையதான இப் பெரிய புராணம், தித்திக்கும் இனிய தமிழில் பாட்டுகளாக செய்திட, இப்பணி இனிது நிறைவேறி உலகில் நிலவுகின்ற மேன்மையை நமக்கு அருள்செய்யும் பொருட்டு, ஐந்து தடக்கைகளையும், தாழ்ந்த செவிகளையும் நீண்ட முடியினையும் உடைய மதயானை முகமுடைய விநாயகக் கடவுளை மனதிலே பதிய வைப்போம் என்று விநாயகருக்கு வணக்கம் செலுத்தித் திருக்கயிலாயக் காட்சியினை நமக்குக் காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்.

பொன்னின் மேலே வெண்மையான திருநீற்றை அணிந்தாற்போன்று - நீண்ட மலையின் ஒரு பகுதியில் - தனது தன்மையை இன்னதென்று அறிவதற்கு அரிதாயிருக்கின்ற சிவபெருமான் எக்காலத்திலும் நீங்காமல் பொருந்தி வாழ்தற்கிடமாக இருக்கும் பெருமை பெற்றது திருக்கயிலாயமலை.

உலகம் என்கிற மாபெரும் கொடியில் தளிர்களாகக் காட்சியளிப்பது நிலவுலகில்

உள்ள பல தலங்கள். உலகம் என்கிற அக்கொடியின் உச்சியிற் பூக்கும் வெண்மலரே திருக்கயிலாய மலையாகும்.

மேன்மைதரும் நால்வேதங்களின் நாதமும், வித்தியாதரர் முதலியோர் கானங்களினாலும், வீணைகளிலிருந்து எழுகின்ற ஓசைகளும், மேகங்களும், யானைக் கூட்டங்களும் ஒன்றுக்கொன்று எதிராகச் செய்யும் முழக்கங்களும், குற்றமில்லாத சிறப்புடைய ஆகாய துந்துபிகளின் முழக்கங்களும் திருக்கயிலாய மலையின் பக்கமெல்லாம் சூழ்ந்திருக்கும்.

பெரும் பெரும் தேவர்கள் எல்லாரும் தங்கள் குறைகளை இறைவரிடம் முறையிட அத்திருமலையில் தகுந்த நேரம் பார்த்திருப்பார்கள். முனிவர்களும், ஞானிகளும் யோகிகளும், கணநாதர்களும் சிவபெருமான் திருமுன்பு வரிசையாக நின்று கண்களிலே ஆனந்த கண்ணீர் பெருக்கெடுக்க, தலைமேற் கைகளைக் குவித்துப் பாடிப் பரவசமாய் காட்சியளிப்பர்.

இத்தகைய பெருமைபெற்ற திருமலையின் அடிவாரத்தில் உபமன்னிய முனிவரின் ஆசிரமம் அழகுடன் அமைந்திருக்கிறது. அம்முனிவர் புலிக்கால் முனிவரின் புதல்வராவார்.

சிவபெருமான் திருவருளால் பெற்ற பாற்கடலை உண்டு வளர்ந்த பெருமைக்குரியவர்; சிவனிடத்தும், சிவனடியாரிடத்தும் பக்தி செலுத்துபவர்; இம்மாமுனிவரைச் சுற்றி எண்ணற்ற முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் அமர்ந்து தம்மைச் சூழ்ந்து கொண்டு அமர்ந்திருந்தபோது, ஒருநாள் அங்கே திடீரெனப் பேரொளி ஒன்று தோன்றியது. ஆயிரம் சூரியன் ஒன்று சேர்ந்தாற் போல் காணப்படும் பேரொளிப் பிழம்பாக அது காட்சியளித்தது. உபமன்னிய முனிவரின் ஆசிரமத்தில் வசிக்கும் முனிவர்களும், யோகிகளும், வியந்து அதிசயத்துடன் அப்பேரொளியைப் பார்த்து நின்றனர். அப்பொழுது, உபமன்னிய முனிவர் நிலவுலாவிய நீர்மலிவேணியனை நினைந்து, இறைவர் அருளால் தென்னாட்டில் தோன்றி அருட்பணியாற்றிய வன்றொண்டர் திருக்கயிலாயத்திற்கு மீண்டும் எழுந்தருளியிருக்கின்றார் என்பதைத் தெளிந்து, எழுந்து கண்கள் நீர்பொழிய, கைகள் தலைமேற் குவித்து வணங்க அப்பேரொளிப் பிழம்பு செல்லும் திசை நோக்கி மெய்மறந்து நின்றார்.

ஆசிரமத்தில் இருந்த ஏனைய முனிவர்கள் செல்லும் அப்பேரொளியையும் அதை வணங்கும் உபமன்னிய மாமுனிவரையும் பார்த்து வியந்து, ''மாமுனிவரே! முழுமுதற் பரம்பொருளான சிவபெருமானையன்றி எவரையும் எதையும் தொழாத - வணங்காத தங்கள் கைகள் இன்று இப்பேரொளியைக் கண்டதும் வணங்குவதென்ன?'' என்று கேட்டார்கள்.



மயிலாப்பூர் கிளை சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா உபயமாக வழங்கிய சோடியம் விளக்கினை அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ். அவர்கள் கிழக்கு ராஜகோபுரத்தில் ஏற்றி வைத்தார்கள். தவத்திரு சுந்தா சுவாமிகள், ஆலய துணை ஆணையாளர் திரு கு. சிதம்பாம், பி.ஏ. உடன் உள்ளார்கள்.

அதற்கு உபமன்னிய முனிவர் இப் பேரொளிப் பிழம்பாய் எழுந்தருள்வோர் **நம்பி நாம் வணங்கும் தகுதி வாய்ந்தவர்**-அவர் சிந்தை எப்பொழுதும் சிவத்தில் அழுந்திக் கிடக்கும்.

அவரே சிவம்-சிவமே அவர் எனக் கூறினார். முனிவர்களும், மற்றவர்களும், உபமன்னிய முனிவரின் திருவடிகளை வணங்கி நம்பியாரூரரின் தவப் பெருமையைக் கேட்க விரும்புகிறோம் எங்களுக்கு அருளிச் செய்க என்று வேண்டி நின்றனர்.

உபமன்னிய முனிவர் மகிழ்ச்சியடைந்து இப்பேரொளிப் பிழம்பாய் காட்சியளிக்கும் நம்பியாரூரர் முன்னாளில் திருக்கயிலையில் சிவபெருமானுக்குப் பூமாலைத் தொண்டும், திருநீற்றுத்தொண்டும் செய்து கொண்டிருந்தவர். அவரது திருப்பெயர் ஆலால சுந்தரர் என்பது. ஒருநாள் இறைவனுக்குச் சாத்துவதற்காக விதிப்படியுள்ள புதுப்பூக்களைக் கொய்து எடுக்கும் பொருட்டு நந்தவனத்திற்கு அவர் சென்றார். சுந்தரர் அங்குச் செல்வதற்கு முன்னே, அம்மையாருக்குப் பூக்கொய்ய அனிந்திதை, கமலினி என்னும் இரண்டு தோழியர் அந்நந்தவனத்திற்கு வந்திருந்தனர்.

அப்பொழுது, பெருந்தவம் செய்த தென்திசை வாழ்ந்திட, தீதிலாத் திருத்தொண்டத் தொகை என்னும் நிதியை உலகுக்குக் கொடுக்க போவாராகிய ஆலாலச் சுந்தரர் அனிந்திதை, கமலினி என்னும் அச்சேடியர்பால் தமது மனத்தைச் செலுத்த பூங்கொடிகள் மனம் அழகர்பால் நாட்டம் கொண்டது. இறைவர் ஆலாலசுந்தரரின் இச்செயலைக் கண்டு ''நீ பெண்கள்ன்பால் உன் மனம் செலுத்தினாய். எனவே, தென்திசையில் அவதரித்து அப்பெண்களிடம் இன்பம் நுகர்ந்து பின்பு இங்கு வருவாய்'' எனறு கட்டளையிட்டார்.

அது கேட்ட ஆலாலசுந்தரர் பதைபதைத்து நடுநடுங்கி, சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ''பரம்பொருளே! மானிடனாய் பிறந்து நான் மாயவலையிற் சிக்கி மயங்கி நிற்கும் போது அடியேனைத் தடுத்தாட்கொள்ளல் வேண்டும்'' என்று வேண்டி நின்றார்.

அருட்பெரும் கடலான இறைவரும் அவ் வேண்டுதலுக்கு இரங்கி அருளினார். பின்னர் ஆலால சுந்தரர் அனிந்திதை, கமலினி என்னும் இருவருடன் தென்னாட்டில் பிறந்து தீதிலாத் திருத்தொண்டத் தொகை எனும் நிதியை உலகுக்கு வழங்கி இப்பொழுது பேரொளிப் பிழம்பாக எழுந்தருளி வருகிறார் என்று சுந்தரர் தவப்பெருமையை உபமன்னிய முனிவர் கூறினார். (தொடரும்)

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் கர்த்தவேள் கருணை, கம்பன் கவிநய மணி வே. தியாகராஜன் அவர்களின் ''ஆடல் காணீரோ'' டாக்டர் த. அமிர்தலிங்கம் அவர்களின் ''கம்பரின் இராமாவதாரம்'' டாக்டர் நாகசாமி அவர்களின் லிங்கபுராணம், அடுத்த இதழ் முதல் தொடர்ந்து வெளிவரும்.

கீதைக்குறள்கள்

—(முன் தொடர்ச்சி)

அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

வானவர் அருளியதை வானோர்க்கே
சேர்க்காதார்
மானமற்ற கள்வர்க்கே நேர். (3/12)

வேள்வியில் எஞ்சியதுண் டால்பாவம் வேரறும்,
தாளிட்டு நீதனித்துண் ணேல். (3/13)

உயிர்கள் உணவால் உளதாம்; உணவுகள்
பெய்யும் மழையால் உள. (3/14)

வேள்வியால் வேண்டினால் வான்மழை
பெய்திடும்;
வேள்விநாம் செய்வினைக ளாம். (3/14)

பிரமமே கர்மம் பிறக்குமிடம்; அந்தமில்
பிர்மத்தை வேள்வியில் காண். (3/15)

ஈங்கிதைக் காண இயலாதோர் ஐம்புலன்
ஓங்கிய வாழ்வெலாம் வீண். (3/16)

நிறையுடையார் இன்பம் நிலையா எதென்றால்
பிறகர்மம் செய்தல் எதற்கு? (3/17)

செய்வதால் இன்பமும் செய்யாமை
யால்துயரும்
எய்யாதான் நில்லான் இரந்து. (3/18)

பற்றற்றுச் செய்வினையைப் பண்புடன் ஆற்றுக
பற்றற்றோர் பெற்றிடுவர் வீடு. (3/19)

நானிலத்தில் சீர்சனகன் பற்றற்ற
நன்செயலால்
வானிலத்தில் பெற்றபேறை நோக்கு. (3/20)

நாட்டாண்மைக் காரர்கள் செய்வனவே
நல்லதென
நாட்டுமக்கள் பின்பற்று வர். (3/21)

அருச்சுனா! நான்செய் தடையதென்று
உண்டோ?
கருமத்தை விட்டிலேன் பார். (3/22)

செய்கருமம் நான்சற்றே செய்யாமை
பார்த்தபின்
செய்வரோமாந் தர்தம் தொழில்? (3/23)

பழியும் குலமயக்கும் பாதிக்கும் உலகைத்
தொழில்நான் புரியா விடின். (3/24)

பற்றுடன் செய்திடுவர் பாமரர், நல்லறிஞர்
பற்றற்று செய்வர் தொழில். (3/25)

அறிஞர் பழியார் அறிவுகுறைந் தோரை.,
அறிந்து துணைபுரி வர். (3/26)

இயல்பாய்க் குணங்களால் ஏற்படும் ஒன்றை
மயலறிவன் தன்செயல்என் பான். (3/27)

குணங்களின் தன்மையைக் கூர்ந்து கண்டோன்
மனமதில் கொள்ளானே பற்று. (3/28)

குணத்தால் அறிவு குறைந்தோரைச் சற்றும்
மனம்நோகச் செய்தல் தவறு. (3/29)

செய்வதெல்லாம் என்தனுக்கே அர்ப்பண
மாய்ச் செய்தபின்
துய்க்க மனம்சலன மற்று. (3/30)

நன்றேநான் கூறியன நானிலத்தோர்
போற்றிவாழின்
கன்மவினை சேராது சார்ந்து. (3/31)

தம்மறிவைத் தாமே தழுவுவோராம்
ஞானமின்றி
எம்சொலை எள்ளிஏற்கா தார். (3/32)

இயல்பினால் ஞானிகளும் எவ்வுயிரும் நன்றே
இயங்குவ தைத்தடுத்தல் என்? (3/33)

விருப்பு வெறுப்பை விடாத புலன்கள்
ஒருவனின் கொல்பகை யாம். (3/34)

தன்தொழிலைச் செய்வதே தக்கதெனச்
செய்திடுக
நன்மையன்று மற்றதைச்செய் தல். (3/35)
நல்லவனும் பாவத்தில் நாட்டம்கொள்
ளல்ஏனோ?
சொல்லுக என்றான் நயந்து. (அருச்சுனன்)
(3/36)
குணத்தினால் தோன்றிடும் காமம் குரோதம்
இணங்கிய வன்பகைக ளாம். (3/37)

கருவுக்குப் பையும்கண் ணாடிக்குத் தூசும்
நெருப்புக்குச் சூழ்புகையும் மாசு. (3/38)

மறைத்திடுமிம் மூன்றினைப்போல் மாந்தரின்
ஆசை
மறைத்திடும் ஞானத்தைச் சூழ்ந்து. (,,)

ஆசையின் தாகத்தை ஆற்றவும் கூடுமோ!
ஆசைக்கும் உண்டோ அளவு. (3/39)

புலனைந்தும் உள்மனமும் புத்தியுமே ஆசை
மலர்ந்து வளரும் இடம். (3/40)

ஸ்ரீ ஐயப்பன்

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

பரமாத்மா ஒன்றே சிவனாகவும் நாராயணனாகவும் ரூபம் தரிக்கிறது. சிவனாக இருக்கும்போது ஞானமூர்த்தியாக இருக்கிறது. நாராயணனாக இருக்கும்போது லோக சம்ரட்சணம் செய்கிறது. இப்படிச் சொல்வதால் சிவனும் விஷ்ணுவும் முற்றிலும் வேறு வேறு என்றோ, அல்லது தொழிலை ஒட்டிக் கொஞ்சம் வேறுபட்டாற் போலிருக்கிற நிலையில் சிவனுக்குப் பரிபாலன சக்தி இல்லை என்றோ, விஷ்ணுவுக்கு ஞானசக்தி இல்லை யென்றோ அர்த்தமில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் முக்கியமாகச் செய்கிற அநுக்கிரகத்தையே குறிப்பிட்டேன்.

ஆல விருட்சத்தின் கீழோ, பனிமலை உச்சி மீதோ சிவபெருமான் வீற்றிருக்கிறார். உடலெல்லாம் விபூதிப் பூச்சு, புலித்தோலை இடுப்பில் கட்டி, யானைத் தோலைப் போர்த்தியிருக்கிறார். தலையிலே ஜடாமுடி, அவரது ஸ்வரூபம் அலங்காரம், வாசஸ்தானம் எதைப் பார்த்தாலும் ஞானிகளுக்கு உரியதாக இருக்கிறது. அவர் கரத்திலேயே ஞான முத்திரை தாங்கியிருக்கிறார். ஆத்ம தியானத்தில் ஆழ்ந்திருக்கிற அவரது சந்நிதி ஒரே சாந்தமாக இருக்கிறது. பரம சத்தியத்தைப் போதிக்கிற பரமகுரு அவரே. அந்தப் பரம சத்தியமும் அவரன்றி வேறில்லை. இந்த உபதேசம் ஞானியின் தொழில்.

லோக ரட்சணம் என்பது ராஜாவின் கடமை. அதனால் தான் நாராயணனை ஸ்ரீவைகுண்டத்தில் சக்கரவர்த்திபோல் தியானிக்கிறோம். பீதாம்பரம், கௌஸ்துபம், வனமாலை, கிரீட குண்டலங்கள் தரித்து, சாட்சாத் மகாலட்சுமியை மார்பிலே வைத்துக்கொண்டு ராஜாதி ராஜனாக இருக்கிறார் மகாவிஷ்ணு.

ஆசார சீலராக ரிஷிகளைப் போல் ஈசுவரனுக்கு எப்போது பார்த்தாலும் ஸ்நானம் செய்வதில் பிரியம். அதனால்தான் வடதேசத்தில் ஈசுவரன் கோயில்களில் எல்லாம் சிவலிங்கத்தின் மேல் எப்போது பார்த்தாலும் ஜலம் கொட்டிக் கொண்டிருக்கும்படி ''தாரா பாத்திர''த்தைக் கட்டி வைத்திருக்கிறார்கள். சக்கரவர்த்தி போன்ற மகாவிஷ்ணுவுக்கோ அலங்காரத்தில் பிரியம் அதிகம். அவருக்குப் பட்டும் பொன்னும் புனைந்து மகிழ்கிறோம்.

அலங்காரப் ப்ரியோ விஷ்ணு;
அபிஷேகப் ப்ரியோ சிவ:

என்றே சொல்வார்கள்.

ஈசுவரனின் அழகு மனத்தை அடங்கச் செய்கிற சாந்த ஸ்வபாவம் வாய்ந்தது. ஸ்ரீமந் நாராயணனின் சௌந்தரியமோ மனத்தை மோகிக்கச் செய்து ஆனந்தக் கூத்தாடச் செய்வது. விஷ்ணுவின் திவ்விய ரூபத்திலிருந்து வைத்த கண்ணை வாங்க முடியாமல் எவரும் சொக்கிக் கிடக்க வேண்டியதாகிறது. ஸ்ரீராமனாகவும், கிருஷ்ண பரமாத்மாவாகவும் அவதரித்தபோதும். இந்த ஜகன் மோகன சௌந்தரியம் அவரைவிட்டு நீங்காமலே இருந்திருக்கிறது. இப்படிப் பட்டவர் மோஹினி என்றே ஓர் உருவம் கொள்ளும்போது எத்தனை அழகாக இருந்து, எல்லோர் உள்ளங்களையும் மோஹிக்க வைத்துக் கொள்ளை கொண்டிருப்பார். பரமஞானியாக, தபோமயமாக ஜ்வலித்துக் கொண்டிருந்த பரமேசுரனின் மனத்தைக்கூட மகாவிஷ்ணுவின் மோகினி ரூபம் மயக்கி விட்டது என்று புராணங்கள் சொல்கின்றன. மோகினியாக வந்த நாராயணனின் காருண்ய லாவண்யமும் பரமேசுவரனின் சாந்த ஞானமும் ஒன்று சேர்ந்தவுடன ஒரு மகாதேஜஸ்-ஒரு பெரும் ஜோதி பிறந்தது. இந்தத் தேஜஸ் ஐயப்பனாக உருக் கொண்டது.

ஹரிஹர புத்திரன் என்றும், சாஸ்தா என்றும், ஐயனார் என்றும் சொல்வது இந்த ஐயப்பனைத்தான்.

ஐயன் என்பது 'ஆர்ய' என்பதன் திரிபு. 'ஆர்ய' என்றால் 'மதிப்புக்குரிய' என்று பொருள். சாட்சாத் பரமேசுவரனுக்கும் நாராயண மூர்த்திக்கும் ஜனித்த குழந்தையைவிட மதிப்புக்குகந்தவர் எவருண்டு? ஞானமும் தபசும் கலந்த சிவனின் பிரம்ம அம்சம், கிருபையும் சௌந்தரியமும் சக்தியும் கலந்த விஷ்ணுவின் ருத்ர அம்சம் இரண்டுமே நாம் உய்வு பெற அத்தியாவசியமாகும். ஹரிஹர புத்ரனாகிய ஐயப்பனிடம் இவையெல்லாமே ஒன்று சேர்ந்திருப்பதாகக் கொள்ளலாம். இதனால்தான் போலிருக்கிறது. சிவபெருமானின் மற்ற இரு பாலர்களைப் பிள்ளையார் என்றும் குமரன் என்றும் குழந்தைகளைக் குறிக்கிற சொல்லால் குறிப்பிட்டாலும் அவரது மூன்றாவது புத்திரனான சாஸ்தாவை மட்டும்மதிப்புக்குரியவராக ஆர்யராக-ஐயனாராகக் குறிப்பிடுகிறோம். ('ஆர்ய' என்பதுதான்' அய்யர் என்றாயிற்று. முதலி-முதலியார், செட்டி-



சென்னையில் நன்கு பராபரிக்கப்பட்ட ஆலயமாக திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் ஆலயம் 1990ஆம் ஆண்டிற்கான பரிசை ‘மயிலாப்பூர் அகாடமி’யிடம் பெற்றது. பரிசிற்கான கேடயத்தை மேதகு தமிழக ஆளுநர் திருமிகு **பீஷ்ம நாராயணசிங்** அவர்கள் வழங்க ஆலய நிர்வாக அதிகாரி **வெ. சாரங்கபாணி** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திருமிகு கே. ஏ. **கிருஷ்ணசாமி, பி.ஏ.பி.எல்.,** அவர்கள் முன்னிலையில் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

செட்டியார் மாதிரி அய்யனுக்கு மரியாதைப் பதம் அய்யனார். இதிலே ஒரு வேடிக்கை பொதுவாகத் தமிழ்நாட்டில் அய்யர்(குருக்கள்) பூஜிக்காத கிராமக் கோயில்களில உள்ள சுவாமிதான் அய்யராக இருக்கிறார். கொஞ்சம் கூட இப்போது பேசப்படுகிற இன வித்தியாசங்கள் முன்னே இல்லை என்பதற்கு இதுவே ஒரு அடையாளம்.

சபரிமலையில் ஓரிடத்தை ‘ஆரியங்காவு’ என்று ஆரியனுடைய காடாகவே சொல்கிறார்கள். தேசத்தில் எத்தனையோ ஸ்வாமிகளுக்குக் கோயில் இருந்தாலும் சாஸ்தாவைத் தவிர எவருக்குமே அய்யர், ஆரியன் என்ற பெயர்கள் இல்லை.

சாஸ்தா என்பதே தமிழில் சாத்தன். தமிழ்நாட்டில் இருக்கப்பட்ட அநேக சாத்தனூர்களின் முக்கியமான தெய்வம் சாஸ்தாவான ஐயப்பன்தான்.

தமிழ்நாட்டில் கிராமத்துக்குச் கிராமம் ஐயனார் கோயில் உண்டு. கேரளத்தில் கிராம தேவதையாக ‘இல்லாமல் வேறுவிதத்தில் ஐயப்பன் வழிபாடு வெகுவாகப் பரவி வளர்ந்திருக்கிறது.

அவர் நம்மைக் காவல் புரிகிற தெய்வம். காற்று, கருப்பு முதலான பலவித தீய சக்திகளிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறவர்.

இதெல்லாவற்றுக்கும் மேலாக நாராயணனிடமிருந்து நமக்கு விமோசனம் தருகிற ஞானத்தை அளிக்கும் உரிமை பெற்றிருக்கிறார்.

சுதந்திர இந்தியாவில் ஐயப்பன் ரொம்ப ரொம்பக் கியாதி பெற்று வருகிறார். சுதந்திர சாசனத்தில் அளித்திருக்கிற பேச்சுச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பக்கத்தில் நாஸ்திகப் பிரசாரம் தடபுடலாக நடக்கிற போதே, மறுபக்கத்தில் அது எடுபடாத அளவுக்கு ஐயப்ப பக்தி நாளுக்கு நாள் அமோகமாக விருத்தியாகிக் கொண்டிருக்கிறது.

கேரளத்தில் எட்டாக் கையில் சபரிமலையில் இருக்கிற ஐயப்பன் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ்நாடு, மற்ற ராஜ்யங்கள் மீதெல்லாம் கூடத் தம் ராஜதானியை விஸ்தரித்துக் கொண்டே வருகிறார்.

இது மிகவும் உற்சாகமளிக்கிற விஷயம். நாஸ்திகப் பிரசார விஷயத்தைத் தடுக்கிற அருமருந்தாக வந்திருக்கிறது ஐயப்ப பக்தி.

அவரது கிருபையை நாடி, அதற்குப் பாத்திரர்களாக வாழ்ந்தோமானால் நாமும் நாடும் உலகமும் சிறப்புற்று விளங்குவது நிச்சயம்.

— நன்றி: தெய்வத்தின் குரல்,
முதற் பகுதி.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம் M.A.,Ph.D.,
அச்சிட்டோர் தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம். சென்னை-600002.

மகாமக விழாக் காணும் திருக்கோயில்களின் திருப்பணிக்கு

நன்கொடை வேண்டுகோள்

இறையன்பர்களே!

வணங்கி மகிழ்கிறோம். புனித நதிகளான காவிரியும், அரசலாறும் மாலை யிட்டதுபோல் சூழப்பெற்றது தான் திருக்குடந்தை மாநகரம். இந்நகரில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகப் பெருவிழா வருகிற 18-2-1992 அன்று புனித நன்னாளில் நடைபெற உள்ளது. அதுபோது இந்திய திருநாட்டின் பல மாநிலங்களிலிருந்தும், மக்கள் பெருவெள்ளமென திருக்குடந்தை நோக்கி வர இருக்கிறார்கள். அந்தப் புனித நன்னாளில் குடந்தை நகரின் கண் உள்ள பன்னிரண்டு சைவத் திருக்கோயில்களிலும், ஐந்து வைணவத் திருக்கோயில்களிலும் எழுந்தருளியிருக்கும் சுவாமிகளுக்கும் மகாமகக் குளத்திலும், காவிரியிலும் புனித தீர்த்த வாரி நடைபெறும். பக்தர்கள் காலை 11.45 முதல் 12.30 வரை நீராடலாம்.

இந்த மகாமகப்பெருவிழாவினை ஒட்டி குடந்தை நகரின் கண்உள்ள கீழ்க் கண்ட திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் சுமார் ரூ. 35 லட்சத்திற்கு நடைபெறுகின்றன. எனவே இறையன்பர்கள் மேற்படி திருப்பணியில் பங்கு கொண்டு இயன்ற அளவில் நன்கொடை அளித்து இறைவனின் பேரருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம். நன்கொடையினை அந்தந்த திருக்கோயில்களின்— செயல் அலுவலருக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

1. மகாமகக் குளத்தைச் சுற்றியுள்ள 16 சோடச மகாலிங்கசுவாமி திருக்கோயில். (செயல் அலுவலர் அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயில், கும்பகோணம்).
2. அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில், கும்பகோணம்.
3. அருள்மிகு கௌதமேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம்.
4. அருள்மிகு சோமேஸ்வரர் சுவாமி திருக்கோயில், கும்பகோணம்.
5. அருள்மிகு ஆதி கம்பட்ட விஸ்வநாதர் திருக்கோயில், கும்பகோணம்.
6. அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம்.
7. அருள்மிகு நாகேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம்.
8. அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம்.
9. அருள்மிகு அமிர்தகலசநாதர் திருக்கோயில், திருக்கலசநல்லூர் (சாக்கோட்டை).
10. அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயில், கும்பகோணம்.
11. அருள்மிகு சக்கரபாணி சுவாமி திருக்கோயில், கும்பகோணம்.
12. அருள்மிகு இராமசுவாமி திருக்கோயில், கும்பகோணம்.
13. அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில், கும்பகோணம்.
14. அருள்மிகு சரநாராயண பெருமாள் திருக்கோயில், கும்பகோணம்.

எஸ். கோலப்பன், பி.ஏ.
உதவி ஆணையர்
கும்பகோணம்.

C. V. இராஜாராம், பி.ஏ.,பி.எல்.
துணை ஆணையர்,
மயிலாடுதுறை.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

பதிவு எண். எம். 7039

புகழின புகழாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு 19-12-91 அன்று சென்னைப் பலகலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மேதகு ஆளுநர் திருமிகு பீஷ்ம நாராயண சிங் அவர்கள மாண்புமிகு முதல்வருக்கு டாக்டர் பட்டம் வழங்குகிறார்கள். சென்னைப் பலகலைக்கழக இணைவேந்தரும் மாண்புமிகு கல்வியமைச்சருமான திருமிகு ஆர். எம். வீ. அவர்கள் உடன் உள்ளார்கள்.